பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 18 வெள்ளிக்கிழமை (01.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 186

## முகமாலையில் புதனன்று மோதல்

கொழும்பு, ஜூன் 1

முகமாலை முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளில் இடம்பெற்ற மோதலில் புலிகள் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் - இரண்டு இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் பலாலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கி புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும்-

இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 2 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (சி)

# பாகிஸ்தானிடமும் சீனாவிடமும் ஆயுத உதவி கேட்பதா? இந்தியாவிடமல்லவா அதனை இலங்கை கேட்க வேண்டும்!

## பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன்



சென்னை, ஜூன் 1

இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானிடமிருந்தோ அல்லது சீனாவிடமிருந்தோ ஆயுத உதவி கேட்பதை இந்தியா விரும்பவில்லை. அவர்களுக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டால் இந்தியாவைத்தான் அணுக வேண்டும். அழிவுதரும் ஆயுதங்கள் தவிர்ந்த பாதுகாப்புக்கான ஆயுதங்களை இந்தியா வழங்கும்.

இப்படிக் கூறியுள்ளார் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன்.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியை நேற்றுச் சென்னையில் சந்தித்துப் பேசிய பின்னர் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் செய்தியாளர்களி ம் இப்படிக் கூறினார்.

தமிழக முதல்வருடன் 50 நிமிடங்கள் அவர் கலந்தரையாடினார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தவையாவது:-

★ முதல்வரைச் சந்தித்து இந்தியக் கடலோரப் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு பற்றியும், மீனவர்களின் பாதுகாப்பு பற்றியும் பேசி

(08ஆம் பக்கம் பார்க்க)

# புறக்கோட்டை லொட்ஜுகளிலிருந்து தமிழர்களை வெளியேற்றுமாறு உத்தரவிட்டதாகப் பரபரப்பு!

## ஆனால் பொலிஸ் அதிகாரி மறுத்துவிட்டார்

கொழும்பு, ஜூன் 1

**கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் உள்ளலொட்ஜுகளில் (விடுதிகளில்) தங்கியுள்ள வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு முன்னதாக வெளியேற்றுமாறு பொலிஸ் தரப்பில் உத்தரவிட்டதாகப் பரவிய தகவலால் நேற்றுக் கொழும்பில் தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் இது விடயம் ஜனாதிபதிவரை சென்றதும் பொலிஸார் அந்தவாறு உத்தரவிடவில்லை என்று மறுத்துரைக்கப்பட்டது.**

புறக்கோட்டைப் பகுதியில், கொழும்பு மத்தியில் உள்ள 60 விடுதிகளின் உரிமையாளர்களை நேற்றுப் பிற்பகல் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து -

அங்கு தங்கியுள்ள வடக்கு - கிழக்கு தமிழர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு முன்னர் வெளியேறுமாறு கூறுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உத்தரவிட்டார் என்று வெளியான தகவல் இங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது விடயம் அமைச்சர் பெ. சந்திரசேகரன், பிரதி அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் ஆகியோர் மூலம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அப்போது இத் தகவல் தவறானது என்று மறுத்துரைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி ஜெயரட்ணா இது குறித்துத் தெரிவிக்கையில் -

''வடக்குகிழக்குத்தமிழர்களை லொட்ஜுகளில் இருந்து வெளியேற்றுமாறு நாம் கேட்கவில்லை. அதேநேரம் புதிதாக வருபவர்களை பதிவு செய்யும்போது அவர்கள் பற்றிய பூரண விவரங்களைத் தெரிந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

(08ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு மீது புலிகள் ஷெல்! சிப்பாய் பலி; இருவர் காயம்!!

கொழும்பு, ஜூன் 1

மணலாறு (வெலிஓயா) பகுதி மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இத்தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார். இரண்டு பெண்கள் காயமடைந்தனர். மணலாறு எத்தாவெட்டுனுவெவ என்ற இடத்தில் ஷெல்கள் வீழ்ந்தன என்று தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (சி)

### மண்டைதீவு சோதனைச் சாவடியில் வழிமறிக்கப்பட்ட பின் காணாமற்போன

# பங்குத்தந்தை வண.ஜிம்பிறவுணின் முண்டமே புங்குடுதீவுக் கடலில் இருந்து மீட்கப்பட்டது!

### மரபணுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டதாகத் தகவல்

கொழும்பு, ஜூன் 1

புங்குடுதீவுக் கடலில் இராணுவத்தினர் பயன்படுத்தும் சாக்குப் பொதிக்குள் - உருக்குலைந்த சேதமுற்ற நிலையில் - மார்ச் நடுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித உடலின் முண்டம், மண்டைதீவில் காணாமற்போன அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை வண.திருச்செல்வம் நிஹால் ஜிம் பிறவுணுடையதே என்பது மரபணுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கொழும்பு, மஹரகம பொதுவைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனையில் இது உறுதிப்படுத்தப்பட்டதாக சுயாதீன - உத்தியோகப்பற்றற்ற - வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'தமிழ்நெற்' இத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

பங்குத் தந்தை வண ஜிம் பிறவுணின் பெற்றோரின் இரத்தமாதிரியும், சம்பந்தப்பட்ட உடற்பாகத்தின் எஞ்சிய பகுதிகளும் மரபணுப் பரிசோதனைக்காக வைத்திய சாலைக்குக் கிடைத்திருப்பதை வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரி ஏற்கனவே உறுதிப்படுத்தியிருந்தார்.

மரபணுப் பரிசோதனையில் சம்பந்தப்பட்ட முண்டப்பகுதி வண. ஜிம் பிறவுணுடையதே என்று உறுதிப்படுத்தப்பட்ட தகவல், இவ்விடயத்தை விசாரித்து வரும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு வைத்தியசாலை வட்டாரங்களால் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அல்லைப்பிட்டி பங்குத் தந்தையான வண. ஜிம் பிறவுண் (வயது - 34), அவரது உதவியாளர் வென்ஸஸ்லஸ் வின்சென்ட் விமலன் ஆகிய இருவரும் (வயது - 38) கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி மண்டைதீவு இராணு

(08ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்துக்கான யுத்தம் என்ற சந்திரிகா வழியில் ராஜபக்ஷவும்!

### அவரைப் பேட்டி கண்டு உரையாடிய அல்-ஜெஸீரா செய்தியாளர்

கொழும்பு, ஜூன் 1

'யுத்தம் மூலம் சமாதானத்தை அடைதல்' என்ற கொள்கைப் போக்கை முன்னைய ஜனாதிபதி சந்திரிகாவின் நிர்வாகம் முன்னெடுத்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கைப்போக்கை விளக்குவதற்கும் அந்த வாசகமே போதுமானது.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நீண்டநேரம் கலந்துரையாடி பேட்டி கண்ட 'அல்-ஜெஸீரா' செய்தி நிறுவன ஊடகவியலாளர் தெரிவித்திருக்கின்றார்.

ரிமோர் நமிலி என்ற அந்தச் செய்தியாளர் கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடினார். அதன் பின்னர் வரைந்த செய்திக் கட்டுரையில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

''யுத்த நிறுத்தம் தோற்றுவிட்டது'' என்று இலங்கை ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் சமாதானம் மிகத் தூரத்தில் இல்லை என்று அவர் கருதுகின்றார்.

வழமையாக மிகச் சிக்கலான விடயங்களைக் கொண்டுள்ள இலங்கை அரசியலை - குழப்பமானகட்டமைப்பை - இலகுவாக இப்படி வியாக்கியானப்படுத்தலாம்:- தமிழ்ப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடங்கிவிட்டாலும், இராணுவம் வென்றுவரும் நிலையில், கிளர்ச்சியாளர்களின் தலைவர் பிரபாகரன் அதனை அங்கீகரித்து, தமது ஆக்கிரமிப்பை நிறுத்தக் காலம் செல்லாது. அந்த நிலையில் சமாதான உடன்பாடு குறித்துப் பேசப்படும்.

இலங்கையில் மத அல்லது இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை எனவும் -

**இந்தியாவிடமே சாவி உள்ளது**

தனது இராணுவத்தின் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதில் மேற்குலக சமூகம் முழுத் தவறிழைக்கின்றது எனவும் - இலங்கையின் அரசியல் எதிர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சமாதானத்தை உருவாக்க பிரிட்டிஷ் அரசாங்கம் முனைப்புடன் செயற்படும்

### தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் பிரதமர் கோர்டன் வாக்குறுதி



லண்டனில் இருந்து குமரன்

லண்டன், ஜூன் 1

இலங்கை மக்களிடையே ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உண்டாக்கி, அங்கு சமாதானத்தைக் கொண்டுவருவதற்குத் தமது அரசாங்கம் முனைப்புடன் செயற்படும் - என்று புதிய பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் தம்மைச் சந்தித்த பிரிட்டிஷ் தமிழர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்திருக்கிறார்.

இம்மாத மத்தியில் பிரிட்டனில் புதிய பிரதமராக கோர்டன் பிறவுண் பதவி ஏற்கவுள்ளது தெரிந்ததே.

பிரிட்டிஷ் தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகள் அவரை கடந்த புதன்கிழமை (மே 30ஆம் திகதியன்று) சந்தித்தனர். பிரபல தொலைக்காட்சிச் செய்தியாளர் ஜூலியட் பொஸ்ரர்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொக்குவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தானம்

### கௌரவிப்பு விழா




மேற்படி எமது ஆலயத்தில் இவ்வருடம் நடைபெற்ற மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தி வைத்தவர்களைப் பாராட்டும் முகமாக மஹோற்சவ பிரதம குரு, ஆலய பிரதம அர்ச்சகர் உட்பட பின்வருவோர்க்கு 31.05.2007 அன்று மாலை நடைபெற்ற கௌரவிப்பு விழாவின்போது ஆலய பரிபாலன சபையினராகிய நாங்களும், அடியார்களும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி நன்றியுடன் கௌரவித்தோம்.

மஹோற்சவ பிரதமகுரு வீரசைவ சிவஸ்ரீ செல்வரத்தினக் குருக்கள் வைரவநாதக் குருக்கள் (உரும்பிராய் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானபிரதமகுரு) - ''சிவாகம கிரியாவித்தகர்'' ஆலய பிரதம அர்ச்சகர் வீரசைவ சிவஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் பாசாங்குச ஐயா (கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயிலடி) ''சிவபூஜாநிதி'' சர்வசாதகர் - வீரசைவ சிவஸ்ரீ பேரின்பநாதக் குருக்கள் இன்பராஜ ஐயா (பனிப்புலம் ஸ்ரீ முத்து மாரியம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும், பிரதம அர்ச்சகரும்) ''சிவாகம சாதக பூஷணம்'' உதவி அர்ச்சகர் - வீரசைவ சிவஸ்ரீ ச. பவா ஐயா (உரும்பிராய் ஆதிபராசக்தி தேவஸ்தானம்).

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையும் அடியார்களும்

## பொருளியல் கருத்தரங்கு

DMI - Jaffna | BRIGHTEN - சாவகச்சேரி
ACA - இணுவில் | SUBRA - சித்தங்கேணி

ஆசிரியர்: S.S.சிறி

8 வெளியீடுகள் வினாவிடைகளுடன் வழங்கப்படுகின்றன. பதிவினை மேற்கொண்டு பெறவும்.

PART - I (5 முதல் 23 வரை)
PART - II (25 முதல் ஜூலை 8 வரை)

வெளிமாணவர்கள் விரும்பிய நிறுவனங்களில் கருத்தரங்கில் பங்குகொள்ளலாம்.

## இலங்கை மின்சார சபை
## யாழ். பிரதேச அலுவலகம்
## மின் தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (02.06.2007) சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்.*

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம்வருந்துகின்றோம்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2007.05.30

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.
(சி/52524)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் மாவிட்டபுரம்,
கிளை 12 இன் பொதுச்சபைப் பிரதிநிதியும்
நீண்டகால கூட்டுறவாளருமாகிய

**அமரர் வ.வயிரவப்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயர் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் கூட்டுறவுத்துறை சார்ந்த நண்பர்களுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை.
(ச/52525)

## மரண அறிவித்தல்

### வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை

*(சமாதான நீதிவான் - முன்னாள் ஊழியர், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை வாகனப்பகுதி)*



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை (J.P) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் கலைவாணி (ஆசிரியை, யா/ஈவினை அ.த.க. பாடசாலை), இசைவாணி (ஜேர்மனி), தேவகி (சுவிஸ்), கலைக்குமரன் (கெயர் நிறுவனம்), கயல்விழி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார், செல்வானந்தன், மனோகரன், துர்க்கா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனும் சசி, மதனிகா, அபிஸ்கர் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி மாசிவன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.கலைக்குமரன் *(மகன்)*,
ச.கிருஷ்ணகுமார் *(கண்ணன் - மருமகன்)*.

*இராசன் கடையடி (பவானி களஞ்சியம்), இராச வீதி, நீர்வேலி.*
(61153)

## 'மவ்பிம' பத்திரிகை நிர்வாகி கைது

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் 'மவ்பிம', 'சண்டே ஸ்ரான்டர்ட்' பத்திரிகைகளை வெளியிடும் ஸ்ரானட்டர்ட் நியூஸ் பேப்பர் குழுமத்தின் நிர்வாக இயக்குநருமான அலஸ் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு நவலோக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். விடுதலைப் புலிகளுடன் நிதித் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் விசாரணை செய்த பின்னர் வைத்தியசாலையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். கடந்த மார்ச் 13ஆம் திகதி நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய முடக்கப்பட்டது தெரிந்ததே.

### A/L 2009 & 2008

★ A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள், ஆங்கிலம் G.I.T. & சித்திரம்
★ Eng. med. 6 to 10
★ Gr. 1 முதல் O/L வரை
★ புலமைப் பரிசில் Gr. 5 (மாதிரிப் பரீட்சைகளுடன்)

**SHAMROCK**
*ஈச்சமோட்டை, யாழ்.*

### 2009 A/L வர்த்தகப் பிரிவு

கணக்கீடு - தவா
திங். , புதன்
மு.ப. 6.30
பொருளியல்
V.V.K. கரன்
வணிகக்கல்வி
மிக விரைவில்

பெனின்கலா அக்கடமி
புங்கன்குளம்

### முக்கிய அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா DETE 2004/05 பரீட்சையில் சித்தியடைந்த அனைவரையும் 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் [பெருமாள் கோயிலுக்கு முன்பாக] கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். [முக்கிய விடயம் கலந்துரையாட இருப்பதால்]

*ஆங்கில ஆசிரியர் மன்றம்.*

## விற்பனைக்கு உண்டு

மலிவான, தரமான கோழி இறைச்சியை (ஐஸ்) பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்.

**ஆதவன் களஞ்சியம்**
இல.328, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8418, 0777 874708
குறிப்பு: விநியோக முகவர் தேவை.

## விற்பனைக்கு

P4 கணனி, Microlab woofer 2.1

**றஞ்சனாஸ்,**
383, K.K.S. Road, சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம்.
(61103)

## மனோகரா யாழ்ப்பாணம்

வெகு விரைவில்.......!
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்த், ஸ்ரேயா மற்றும் பலர் நடித்த
**சிவாஜி**



## தவறவிடப்பட்டது

பஞ்சாட்சரம் சுலேந்திரன் என்ற பெயரில் உள்ள எனது மோட்டார் வாகன சகல ஆவணங்களும் தவற விடப்பட்டுள்ளன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

*செட்டிவளவு லேன், இணுவில் மேற்கு, இணுவில்.* 021-4591102
(61141)

## செய்முறைப் புவியியல்

ஆரம்பம் - 02.06.2007

| வரைபடங்கள் 2008 | நேரப்படம் 2009 |
| --- | --- |
| யாழ். 10.00 இணுவில் 7.00 | யாழ். இணுவில் |

**பொருளியற் கல்லூரி**
**P.S.குமரன் B.A. (Hons)**

## கண்ணீர் அஞ்சலி

### வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை



எமது பாடசாலை
ஆசிரியை
கலைவாணி
கிருஷ்ணகுமார்
அவர்களின் அன்புத் தந்தையும் எமது பாடசாலையின் நலன்விரும்பியுமாகிய

**வ.வயிரவப்பிள்ளை**

அவர்களின் இழப்பினால் கவலை அடைவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ ஈவினை அ.த.க. பாடசாலை.
(61162)

## சேவை நலன் பாராட்டு



திருமதி
**யோகம்மா இராஜரட்ணம்**

பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
நல்வழி காட்டுவதில் அன்னையாய்
முப்பத்தாறு வருடங்கள் நல் ஆசிரியையாய்
கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற
இவரையும் இவர் ஆற்றிய சேவையையும்
பாராட்டுவதோடு இவரையும்
இவரது குடும்பத்தினரையும்
நல்லாரோக்கியத்துடனும்
நீண்ட ஆயுளுடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.

*திருமதி க.சிவகுமார், திருமதி மே.இராஜேந்திரன்,*
*திருமதி சி.இராஜேஸ்வரன்*
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை
(61144)

## சுக வாழ்வுக்கான பயணத்தில் புதியதொரு படிக்கல்
## சுகாதார பராமரிப்பு சேவை

*நன்கு பயிற்றப்பட்ட தகுதிச் சான்றிதழ் பெற்ற பராமரிப்பாளர்கள் எம்மிடம் உள்ளனர்.*
*வீடுகளிலும், வைத்தியசாலைகளிலும் இரவு, பகல் சேவை வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாருக்குமான பராமரிப்பாளர்கள்.*

எமது சேவைகள்:
1) குழந்தைகள் பராமரிப்பு
2) நோயாளர் பராமரிப்பு
3) ஊனமுற்றோர் பராமரிப்பு
4) முதியோர் பராமரிப்பு
5) பிரசவத் தாய்மாருக்கான பராமரிப்பு

தொடர்புகளுக்கு:

**சுகவாழ்வுக்கான பயணம் (J/F/H/L)**
கோணாவளை ஒழுங்கை,
(மருத்துவபீடம் முன்பாக)
கொக்குவில் கிழக்கு.
T.P.: 0776203797
0773618524
(61149)

## 10ஆம் ஆண்டு நினைவுகள்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 15 | 23 |
| 04 | 05 |
| 1970 | 1997 |



**அமரர் கனக. சத்தியநேசன்**
(முன்னாள் வைத்தியசாலை உத்தியோகத்தர், VVT)
திதி: அபரபக்க பிரதமை (01.06.2007)

நித்தமுன் முகந்தேடி நினைவுகளை சுமக்கின்றோம்
சொத்துடனே பலவிருந்தும் சோகமுடன் வாழ்கின்றோம்
நித்திரையில் வந்தாலும் நிஜத்தினிலே வாருமப்பா!
பத்தாண்டுகள் கழிந்தாலும் பாசமொன்றே மாறாதப்பா.

என்றும் உங்கள் பாசத்துடன்:
விதுர்ஷா (மகள்),
கலாஜினி (மனைவி).

*'கலாஞ்சலி' அல்வாய்.*
(61120)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 31 | 12 |
| 03 | 06 |
| 1925 | 2006 |



திருமதி
**சுப்பிரமணியம் பரமேஸ்வரி**

எங்கள் அம்மா!
விண்ணேகி ஒளியாகி
ஆண்டொன்று ஆனதோ?
ஒன்றென்ன ஆயிரமானாலும்
நீங்காது உங்கள் அன்புகள்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

*221/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(61140)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி வடக்கு தேற்றாமரத்தடி
# ஸ்ரீஞானவைரவர் சுவாமி கோயில்
# சங்காபிஷேக விழாச் சிறப்பிதழ்

01-06-2007

## திருவாவடுதுறை குருமகாசந்நிதானம் வழங்கிய அருள்வாழ்த்துரை



இலங்கை, நவாலி வடக்கு - தேற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவ சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் 15.09.2003 அன்று நடைபெறுவது அறிந்து மகிழ்ந்தோம்.

வைரவர் வழிபாடு அறுவகைச் சமயத்துள்ளும் ஊடுருவி நிற்கும் பான்மை கொண்டது. புறப்புறமாம் பௌத்தம் முதலாய் அகச் சமயமாம் சைவ ஈறாக அனைத்துச் சமயங்களின் உயிர்நாடியென பைரவம் மிளிர்கின்றது.

''விஞ்ஞான பைரவம்'' எனும் தந்திர நூலில் பைரவம் என்னும் சொல்லிற்கு ப-காத்தலையும், ந-நடுக்கலையும், வ-தோற்றுவித்தலையும் உணர்த்தி மூவிலை ஒருதாட்சூலம் கை ஏந்தி ''மூவரும் யான் என மொழிந்து'' நின்ற நிலை பைரவமாம் எனக் கூறும்.

பைரவ சுவாமி பல்வேறு வடிவங்களில் நின்று அருளுகின்றார். அவ்வகையில் ஸ்ரீஞானவைரவ சுவாமியும் ஒருவர் ஆவார். அப்பெருமானின் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்புற நடைபெறவும், அத்திருக்கோயிலைச் செவ்வனே பராமரித்து வரும் தாங்கள் எல்லா நலனும் பெற்று சிறக்கவும்நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

*''மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்''*

**சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகள்,**
**23ஆவது குருமகா சந்நிதானம்,**
**திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்.**

*(நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் 2003ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ஆம் திகதி நடைபெற்றபோது திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குரு மகாசந்நிதானம் சீர்-வளர்-சீர்தேசிக பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த அருள் வாழ்த்துரை இதுவாகும்.)*

## அஞ்ஞானத்தை அகற்றும் பெருமான்



அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாகிய சிவபிரானது திருக்குமாரர்களுள் ஒருவராகிய வைரவப் பெருமான் தைரியம் மிக்கவர். ஆனால், மிகவும் சாந்தகுணமுடையவர். நவாலியம் பதியிலே தோன்றாத் துணையாக தேற்றாமரத்தடியில் வீற்றிருந்து அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானத்தை உணர்த்தும் ஞானவைரவப் பெருமானுக்கு நிகழும் சர்வசித்து வருஷம் வைகாசி மாதம் 18ஆம் நாள் இன்று (01.06.2007) வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் நிகழ்த்துவது மிகவும் பொருத்தமானதே என ஆசி கூறி அமைகின்றேன்.

பிரம்மஸ்ரீ ச.சி.பாலஷண்முகக் குருக்கள்.
சங்காபிஷேகக் குரு.

## அனைவரும் இன்பமும் சுபீட்சமும் வளமும் பெற்று அமைதியுடன் வாழ்க



யாழ்ப்பாணத்தில் நவாலி வடக்கில் அமைந்துள்ள தேற்றாமரத்தடி ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் திருக்கோயிலில் முதன்முதலாக அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்(1008) நடைபெறவிருப்பது வைரவப் பெருமானின் திருவளாலின்றி வேறில்லை. ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட இவ்வாலயத்தைத் தமது முன்னோர் காட்டிய வழியில் முறையாகப் பரிபாலித்து ஐந்து கும்பாபிஷேகங்களை நடத்தி ஞானவைரவப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமான இராஜேஸ்வரன் அப்பெருமானுக்கு அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேக நிகழ்வைக் காணும் பேறு பெற்றுள்ளார்.

தெய்வீக மகத்துவம்மிக்க ஞானவைரவப் பெருமானுக்கு நிகழும் இந்நைமித்தியக் கிரியையாகிய சங்காபிஷேகத்தின் பயனாய் இவ்வாலய அறங்காவலர், அவரது குடும்பத்தினர், இக்கிராம மக்கள் மாத்திரமன்றி உலகெங்கும் வாழும் இந்துமக்கள் அனைவரும் இன்பமுடனும் சுபீட்சத்துடனும் வளமுடனும் அமைதி யுடனும் வாழ வழி பிறக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய கைங்கரியத்தை நிகழ்த்துவிக்கும் அறங்காவலரது அறப்பணிகள் சிறக்க ஸ்ரீஞான வைரவப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துவதில் மகிழ்சியடைகின்றேன். சங்காபிஷேகத்தின் திருவருட் பேறு எங்கும் நிறைந்து விளங்குவதாகுக!

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்.

## சங்காபிஷேகம் பக்திபூர்வமாக நடைபெற வாழ்த்துகின்றேன்




இந்துக்கோயில்கள் தோறும் காத்தல் கடவுளாக வைரவப் பெருமான் பூஜிக்கப்பட்டுவருகின்றமையினை நாம் அனைவரும் நன்கு அறிவோம். கிராமங்கள் தோறும் வைரவப் பெருமானுக்குச் சிறுசிறுகோயில்களைக் காவல் தெய்வமாகக் கொண்டு அமைத்து வருவதில் இருந்து மாவல்லமை மிகுந்த, வீரம் மிகுந்த தீயசக்திகளை ஒடுக்கும் தெய்வமாக, மக்கள் வைரவப் பெருமானை நம்பிக்கையுடன் வழிபடுகின்றமையை உணரக்கூடியதாகவுள்ளது.

கடந்த 200 ஆண்டுகளுக்கு முன்னர் மறைஞானி வள்ளல் - இராமநாதன் வைரமுத்து அவர்களால் நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அமைக்கப்பட்டது.

மக்கள் என்றும் நம்பிக்கையுடன், துணிச்சலும் கொண்டு வாழவேண்டிய காலம் இதுவாகும். தெய்வ நம்பிக்கை மூலமே எங்கள் அச்சங்களைத் துச்சம் எனத் தூக்கி எறியமுடியும். வைரப் பெருமானின் சூலமானது காத்தலையும் தோற்றுவித்தலையும் காட்டிநிற்கின்றது. எம்மை இந்த அவனியில் கருணையுடன் காத்து நிற்கும் எம்பெருமான் வைரவ மூர்த்தியின் சங்காபிஷேகம் நன்கு பக்தி பூர்வமாக நடைபெற எல்லாம்வல்ல வைரவப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

*ஞானவைரவர் தாள் துணை நிற்பதாக!*

*திருமதி சாந்தி நாவுக்கரசன்,*
*பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*



நவாலி வடக்கில் தேற்றாமரத்தடியில் கோயில் கொண்டு எழுந்தருளி மெய்யடியார்களுக்கு அருள் பாலித்து வேண்டுவார் வேண்டும் வரம் அளிக்கும் நவாலி வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் பெருமானுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வசித்து வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் இன்று (01.06.2007) வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் 9.30 மணிவரையுள்ள கும்ப லக்கின சுபவேளையில் அனுஷ நட்சத்திரத்தில் சங்காபிஷேகம் நடைபெறும். கிரியைகளை அடுத்து 1008 சங்குகளால் வைரவப்பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து விஷேட பூசை நடைபெறும். அத்துடன், வைரவப்பெருமானுக்கு சகஸ்ரநாம (1008) அர்ச்சனையும் நடைபெறும். முதன்முதலாக நடைபெறும் சங்காபிஷேக விழாவில் பங்குபற்றி வைரவப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும்வண்ணம் அடியார்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

## கோமாதா எங்கள் குலமாதா



பசுக்கள் கூட்டங்கூட்டமாகப் புல்லை மேய்ந்துவரும் நேரத் தில் ஒரு நாள் புலியிடம் அவை அகப்பட்டுக் கொண்டன. அங்கு வந்த புலி நெடுங்காலமாக சாப்பாடு இல்லாது இருந்து வந்துள்ளது.

அன்று அங்கு வந்த பசு ஒன்றிடம் புலி கூறியது; இன்று உன்னை விடமாட்டேன் என்று. இதைக் கேட்ட பசு, புலி அரசனே கேளும் நான் சாவதற்கு வினப்பட்டு நிற்கவில்லை. புல் வளர்ந்துள்ள நிலத்தில் மடியவேண்டும் என்பதே எனது விருப்பம்.

எந்த நேரத்தில் என்றாலும் நான் இறப்பது நிச்சயமே.

நான் இவ்வளவு காலமும் பிள்ளை இல்லாமல் மலட்டுத் தன்மையுடன் கோயில் கோயிலாகச் சென்று கும்பிட்டும் நேர்த்திக் கடன்கள் செய்தும் தவம் செய்தும் கடைசியில் கன்று ஒன்று கிடைக்கப் பெற்றேன். அந்தக் கன்று புல் மேயக்கூட அறியாது. நான் இப்போது வரும் பொழுது பால்கூடக் கொடுக்கவில்லை. இதனாலேயே என் மனம் துக்கப்படுகின்றது அல்லாது வேறு எதுவும் இல்லை என்றது.

இதற்கு புலி கூறியது, பசியுடன் நான் இருக்கும் இந்த நேரம் வந்து அகப்பட்ட உன்னைத் தப்பிப்போக விட்டு நான் பசியுடன் இருப்பேனா? உன்னை விட்டால் நீ போய் உன் கன்றுக்குப் பால் ஊட்டக் கொடுத்துவிட்டு திரும்பி வருவாய் என்பது என்ன நம்பிக்கை எனக் கேட்டுவிட்டு, நீ போய் வருவாய் என நம்புகிறேன் எனக் கூறி போகச் சொன்னது.

பின்னர், உன் கன்றுக்கு பால் ஊட்டக் கொடுத்துவிட்டு திரும்பி வரும் வரைக்கும் வழிபார்த்து இருக்கிறேன் என்றும் சொன்னது.

இவ்வாறு புலி சொன்னதும் பசு மிகவும் சந்தோசப்பட்டுச் சென்று தனது கன்றுக்குப் பால் கொடுத்துவிட்டு மீண்டும் புலி இருந்த இடத்துக்கு வந்தது.

அப்போது பசுவைப் பார்த்து புலி கூறியது, நீ செய்த உபதேசம் எல்லாம் அறிந்தேன். ஆகவே, இனி நீ போய் உன் கன்றுக்கு ஊட்டக்கொடுத்து அதனை நன்றாக வளர்த்து கொண்டு சுகமாக இருப்பாயாக என்றது. இனி என்னுடைய இரக்கத்தைப் பார்த்து என்னைப் போகவிட்டு பசியுடன் இருக்கப் போகிறாயா? நான் போகமாட்டேன். புலி பசித்தாலும் புல் தின்னாது. ஆக என்னைத் தப்பவிட்டால் இனி எப்படி உணவு கிடைக்கப் போகின்றது.

என்னை நீ சாப்பிடாமல் விட்டால் இந்த இடத்தில் நான் எப்படியும் எப்பொழுதாவது சாகவேண்டும்.

இப்படியாக புலியும் பசுவும் ஒன்றுக் கொன்று விவாதம் பண்ணிக்கொண்டு இருந்தன.

இந்த நேரத்தில் சிவனும் பார்வதியும் பசுவும் புலியும் இருந்த இடத்தில் காட்சி கொடுத்து அவற்றின் குண இயல்புகளை பார்த்து மகிழ்வுற்று புலியையும் பசுவையும் கைலாயத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இத்தகைய கோமாதாவை கொல்லலாமா? கோமாதா எங்கள் குலமாதா.

**திருத்தொண்டில் சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்,**
*பரம்பரை அறங்காவலர், தேற்றாமரத்தடி*
*ஸ்ரீ ஞான வைரவர் கோயில், நவாலி வடக்கு, மானிப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் அமைதி சமாதானம் நிலவ பெருமானைப் பிரார்த்திப்போம்



நவாலி வடக்கு தேற்றாமரத்தடியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் ஸ்ரீ ஞான வைரப் பெருமானிற்கு இன்று சங்காபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனிற்கு நடைபெறும் அபிஷேகங்களில் சங்காபிஷேகமும் ஒன்றாகும். வெற்றியின் அடையாளங்களைக் கூறுவது சங்கு. இதனில் சிறப்புடையது வலம்புரிச் சங்கு. கடலில் இயற்கையாகவே உற்பத்தி ஆகின்ற பெருமைக்குரியது. இதனால் அபிஷேகம் செய்வது மனித வாழ்வை வெற்றி அடைய செய்வதாகும். இவ் ஆலயத்தில் வருடாந்தம் சிறப்பாக செய்யும் ஆலய நிர்வாக அறங்காவலர் சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் அவர்களை வாழ்த்தி பாராட்டுகின்றோம். இந்த அபிஷேகம் சிறப்பாக நடைபெற்று அனைத்து மக்களுக்கும் மனவலிமை கிடைப்பதுடன் நாட்டில் அமைதியும் சமாதானமும் கிடைத்து மகிழ்ச்சியாக வாழ எல்லாம்வல்ல ஸ்ரீவைரவப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ,**
*இரண்டாவது குரு மகா சந்நிதானம்*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*

## சகல நலன்களும் கிட்ட உளமாரப் பிரார்த்திப்போம்



எல்லாம்வல்ல எம்பெருமான் ஸ்ரீ ஞானவைரவராக நவாலி வடக்கு தேற்றாமரத்தடியில் கோயில் கொண்டுள்ளார். ஐந்தொழில் ஆற்றும் ஆண்டவனின் மனம் குளிர 1008 சங்குகளால் சங்காபிஷேகம் எம்முள் அந்தர்யாமையாய் நின்று இயக்கும் இறைவனை வணங்கி வழிபட சிவனடியார்களுக்கு அமுது நல்கும் மகேஸ்வர பூசை. மெய்யடியார்கள் உளம் மகிழவும் இவ் விழா சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

இங்கு வாழும் ஒவ்வொரு குடிமக்களும் சைவநீதிக்கு அமைவாக நற்சமூகமாக ஒருவரை ஒருவர் மதித்து, புரிந்துகொண்டு உற்றதுணையாக வாழ வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் எம்பெருமானிடம் சகல நலன்களும் நவாலி வாழ் மக்களுக்குக் கிடைக்கவும் நன்மக்களாய் வாழ வழிகாட்டும் சைவம் தழைக்கவும் உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்'

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், யாழ். மாவட்டம்.**

## வைரவரை நினைந்து வணங்கி வாழ்வாங்கு வாழ்வோம்



சிவப்பொலிவும் கலைப்பொலிவும் நிறைந்த பழம்பெரும் திருவூர் நவாலி பாவலர்கள், கலைஞர்கள் பண்பு நிறை அறிஞர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியில் திருக்கோயில்களுக்குக் குறைவில்லை. திருநெறிய வாழ்வு வாழ்ந்து பல ஊரவரும் என்றும் போற்றும் திருத்தொண்டர் அமரர் நவாலியூர் சி.இராமநாதன் வைரமுத்து அவர்களை அறியாதவர்கள் இல்லை. இப்பெருமனாரால் உருவாக்கப்பட்டு இன்று திருவருட் பொலிவோடு சிறக்கும் திருக்கோயிலே நவாலி தேற்றாமரத்தடி ஞானவைரவர் திருக்கோயில். இந்த அரும் கோயிலை ஸ்தாபித்த பெரியார் அவர்கள் பல நூறு திருப்பணிகளைச் செய்த பெருந்தகை. நவாலியூர் நாச்சிமார் கோயில் மண்டபம், அட்டகிரி கந்தசுவாமி கோயில் மண்டபம், களவோடை அம்மன் கோயில் மண்டபம், கீரிமலைச் சிவன் கோயில் வசந்தமண்டபம், சிதம்பரத்திருக்கோயிலில் ஒரு மண்டபம் எனப் புண்ணியவாளன் செய்த பெருந்தொண்டு எண்ணில் அடங்காது. இப்பெருந்தகை நித்திய குலதெய்வமாக வழிபாடு செய்ய ஸ்தாபித்த வைரவப் பெருமான் கோயிலை அவர் மரபில் வந்த ஸ்ரீமான் சி.இராஜேஸ்வரன் அவர்கள் பல்வேறு திருப்பணிகளைக் காலத்துக்குக் காலம் நிறைவேற்றி மகாகும்பாபிஷேகங்களை நடத்துவித்து பாதுகாத்து வருவது பாராட்டத்தக்கது. இருநூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இப்புண்ணிய தலத்தில் இவ்வாண்டு ஆயிரத்து எட்டு சங்குகளினால் அபிஷேகம் செய்து வைரவப் பெருமானின் திருவருளால் எம் மண்ணில் அமைதியும் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டும் என மீளா அடியவர் அறங்காவலர் சி.இராஜேஸ்வரன் அவர்களும்அடியவர்களும் முனைந்து நிற்பது வாழ்த்துக்குரிய விடயமாகும். இயற்கை எழில்மிக்க நவாலிப் பதியில் உறைந்திருக்கும் ஞானவைரவப் பெருமானை இன்றைய நன்நாளில் நானிலத்தவர் அனைவரும் நினைந்து வணங்கி வாழ்வாங்கு வாழ்வோமாக.

*'யாவர்க்குமாம் இன்னுரைதானே'*

செஞ்சொற்செல்வர் **ஆறு.திருமுருகன்.**

## அறப்பணிகளும் சமூகப்பணிகளும் வரவேற்கத்தக்கவை



நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவர் ஆலயதில் நடைபெறவிருக்கும் 1008 சங்காபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்கமகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவை ஆலயங்கள். அவை நன்முறையில் பேணப்பட்டும் நாளாந்தக் கிரியைகள், வருடாந்த உற்சவங்கள் உரிய முறையில் நடத்தப்பட்டும் வருவது அவசியம்.


மக்களின் தேவை கருதி அறப்பணிகளிலும் சமூகப் பணிகளிலும் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற அயராதுழைத்த கோயில் முகாமையாளர் சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் மற்றும் திருப்பணிச் சபையினரும் பாராட்டுக்குரியவர்கள்.

சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் எல்லாம்வல்ல ஸ்ரீஞானவைரவப் பெருமான் அருள்பாலிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*சிரேஷ்ட பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்.*

மலர் ஆக்கம் : சி.இராஜேஸ்வரன்,

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## வைத்திலிங்கம் கனகசிங்கம்

மலர்வு 05-11-1936

உதிர்வு 02-05-2007

02.05.2007 அன்று சிவபதமெய்திய எமது தந்தையாரின் துயரத்தில் பங்குபற்றியும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும், நேரடியாகவும், தந்திகள், தொலைபேசி மூலம் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (01-06-2007) வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

*59, வன்னியார் வீதி,*
*திருகோணமலை.*

(சி-52515)


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**

*Jaffna Head office* No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

*Branch office* No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007**

பதிவுகளிற்கு முந்துங்கள்

**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

*50% Off*
*Advances Courses*

Diploma in Video Editing ~~6500~~ 3250
Diploma in Multimedia ~~5500~~ 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 01/06/2007
Batch II - 02/06/2007
Batch III - 03/06/2007
Batch IV - 06/06/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணினிப் பயிற்சி.


அருட்கலாநிதி
**ம.பே.ஞானரத்தினம்**
அவர்களின் பணிவாழ்வு சிறக்க
**வாழ்த்துகின்றோம்**



*உரோமாபுரியிலே திருச்சபை சட்டத்துறையிலே கல்வியைக் கற்று 14.05.2007 அன்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்று, மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்த அருட்தந்தையின் பணிவாழ்வு சிறக்க அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.*

ரதி குடும்பம் [கொழும்பு]
ரஜனி குடும்பம் [லண்டன்]
ராஜி குடும்பம் [வவுனியா]

(61110)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15,Sirambiyadi Lane, Jaffna.
Branch : #167,Kasthuriyar Rd, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222 422

அலுவலக ஊழியர்களிற்கான நன்மைகருதி விடுமுறைகால (சனி - ஞாயிறு) ஒருமாதகால விசேடவகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | 1000/- |
| Diploma in Desktop Publishing | ~~[illegible]~~ 1450/- |
| Diploma in Computerized Accounting | ~~[illegible]~~ 3500/- |
| Diploma in Hardware Engineering | ~~[illegible]~~ 1450/- |
| Diploma in Video Editing | ~~[illegible]~~ 3000/- |
| Diploma in Graphic Designing | ~~[illegible]~~ 1650/- |
| Diploma in AutoCAD | ~~[illegible]~~ 1450/- |

வகுப்புக்கள் ஆரம்பம் : 02/06/2007


## சேவைநலன் பாராட்டு




திருமதி
**யோகம்மா இராசரத்தினம்**

36 வருடங்களாகக் கணித, விஞ்ஞான ஆசிரியையாக நிறைவான சேவையாற்றி 31.05.2007 இல் ஓய்வுபெற்ற எமது ஆசானின் எதிர்காலம் சிறப்பாய் அமையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நலன்புரிக் கழகம்,*
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க
பாடசாலை

(61136)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## கந்தையா நாகேந்திரம்

(பிரபல புகையிலை வியாபாரி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு)

தோற்றம் 03✱11✱1922

மறைவு 02✱05✱2007

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எம்மையெல்லாம் இப்பூமியிலே வாழ வழிவகுத்த எமது அன்புத் தெய்வமே! எம்மிடமிருந்து காலனும் உங்களைப் பிரித்து மாதம் ஒன்றாகி விட்டது. ஐயகோ மறக்க முடியவில்லை ஐயா! நினைவோ நீங்கவில்லை ஐயா! அன்பையும் பாசத்தையும் அறிவையும் பொழிந்த நீங்கள் எமக்கு நல்வழி காட்டி விட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்கள் ஐயா! உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*இன்று [01.06.2007] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் வீட்டுக்கிருத்தியம் ஆகிய வற்றிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

முகவரி,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்**

(சி/52516)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு விவசாயிகளுக்கென 500 மெற்றிக் தொன் உர வகைகள்

## கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கென 500 மெற்றிக்தொன் உரம் 'மேர்ச் றுகுணு' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

இதில் 400 மெற்றிக்தொன் யூரியா உரமும் 100 மெற்றிக் தொன் 'வி' கலவை உரமும் அடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உரத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டையடுத்து யாழ்.அரச அதிபரின் முயற்சியால் இந்த உர வகைகள் கப்பலில் எடுத்து வரப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

எடுத்துவரப்பட்ட உரவகைகள் உரிய முறையில் பகிரப்பட்டு குடாநாட்டில் உள்ள கமநலசேவை நிலையங்கள் ஊடாக அடுத்த வாரமளவில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

. இதேவேளை -

'இந்துருவலி' கப்பலில் எடுத்துவரப்பட்ட மேலைத்தேய மரக்கறி விதைகள் தற்போது கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

(50)

## பத்து வருடங்களின் பின்னர்

# சாவகச்சேரி சிவன்கோவில் திருவிழாவை மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்1

சாவகச்சேரி சிவன்கோவிலில் பத்து ஆண்டுகளின் பின்னர் இந்த வருடம் பெருந்திருவிழா நடத்தப்படவுள்ளது.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் ஆலயம் பலத்த சேதமடைந்ததுடன் கொடித்தம்பம், தேர் ஆகியவையும் சேதமடைந்தன.

ஆலய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு பூசைகள் தினமும் நடைபெற்று வருகின்ற போதிலும் கொடித்தம்பம், தேர் ஆகியவை புனரமைக்கப்படாததால் இதுவரை வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெறவில்லை.

கொடித்தம்பம், தேர் ஆகியவை புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு திருவிழா நடத்துவற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேர் புனரமைப்புக்கு நிதி உதவிகள் எதிர்பார்ப்பதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(203-207)

# நவாலியூடாக சேவையிலீடுபடும் பஸ் சேவை நேரத்தை மாற்றுமாறு கி.அபி. சங்கம் கோரிக்கை

நவாலி,ஜூன்1

காரைநகரிலிருந்து வட்டுக்கோட்டை நவாலியூடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ் சேவையை காலை 6.30 மணிக்கு நவாலியை வந்தடையச் செய்யுமாறு நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் காரைநகர்ச் சாலை பொறுப்பதிகாரிக்கு மகஜர் மூலம் கோரியுள்ளது.

காரை நகரிலிருந்து காலை 7 மணிக்கு மேல் நவாலியை வந்தடையும் இச்சேவையில் திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் முக்கால் மைல் தொலைவிற்கு நடந்து சென்று வேறு பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே இச் சேவையை அதிகாலை 6.30 மணிக்கு நவாலி வந்து சேர ஆவன செய்யுமாறு அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(202-100)

# திருமுறைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான திருமுறைப் பாடல்களை ஓதுதல், எழுதுதல் ஆகிய போட்டிகள் நாளை சனிக்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(203-207)

# பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன்1

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2002/2004, 2003/2005 கல்வி ஆண்டுகளில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் 2002/2004 கல்வியாண்டில் பயிற்சி பெற்றவர்களுக்கு 11 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கும் 2003/2005 கல்வியாண்டில் பயிற்சி பெற்றவர்களுக்கு 12ஆம் திகதி காலை 9 மணிக்கும் பட்டமளிப்பு நடைபெறும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2002/2004 கல்வியாண்டில் பயிற்சி பெற்றவர்களுக்கு 11 ஆம் திகதி காலை 9 மணிக்கும் 2003/2005 கல்வியாண்டில் பயிற்சி பெற்றவர்களுக்கு 12 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கும் பட்டமளிப்பு நடைபெறும்.

இத் தகவல்களை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

(202)



சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பிள்ளையார் தேர் வெள்ளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

புதிய தேருக்கு கிரியைகள் நடைபெறுவதை முதலாவது படத்திலும் - தேர் வீதியுலா வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

# ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூன்1

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தால் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டி ஒன்றில் ஜொலிஸ்ரார் வி.க.4 விக்கட்டுகளால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஜொலிஸ்ரார் வி.கவுக்கும் ஸ்ரான்லி வி.கவுக்கும் இடையே நடத்தப்பட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி வி.க 44 ஓவர்களில் 187 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் கி.செல்வராசா 65 ஓட்டங்களையும் பிரசன்னா 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஷைலேஸ்வரன் 10 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் வி.க 36 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் உமாகரன் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார்

ஜனிஸ் 10 ஓவர்களில் 28ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(203)

# யாழ்.தபாலக - கல்வி வலய அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஜூன்1

யாழ்.தபாலகத்தால் திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.தபாலக நீலம் அணியும் யாழ். கல்வி வலய அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்தவாரம் நடந்த அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று இவ்விரு அணிகளும் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.தபாலக நீலம் அணியும் பலாலி ஆசிரிய கலாசாலை அணியும் முதலாவது ஆட்டத்தில் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பலாலி ஆசிரிய கலாசாலை அணி 16.2 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தபாலக அணி 19.1 ஓவர்கள் முடிவில் எட்டு இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட் டுக்களால் வெற்றி பெற்றது.

மற்றோர் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் யாழ்.கல்வி வலய அணியும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வி வலய அணி 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.ப.நோ.கூ.சங்க அணி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.



*யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது பெண்கள் பிரிவு கரபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவான கைதடி - நாவற்குழி அ.த.க.பாடசாலை அணியினை படத்தில் காணலாம்.*

*தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பி.முத்துலிங்கம், பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம், விளையாட்டு பொறுப்பாசிரியை உட்பட பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் பாடும்மீன் வெற்றி

குருநகர்,ஜூன்1

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்திய ஏழு வீரர்கள் கலந்துகொள்ளும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை 4:1 என்ற கோல் கணக்கில் வென்று வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொய்யாத்தோட்ட ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. (51)

## விளையாட்டு

# விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்1

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல பிரதேச செயலர்களையும் விளையாட்டு அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (50)

# திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்.சைவபரிபாலன சபையினர் இன்று வெள்ளிக்கிழமை கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தில் திருஞான சம்பந்தர் குரு பூசையை நடத்தவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை சபை மண்டபத்திலும் குருபூசை நடத்தவுள்ளனர்.

(203)

* * *

நல்லூர்,ஜூன்1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வலிகாமம் இந்துசமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(203-111-79)

# சங்கானையில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்.ஜூன்1

சங்கானை சுற்றயல் கூறு வைத்திய சாலையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பல்துறைசார் இலவச மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் மற்றும் சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து இந்த முகாமை நடத்தவுள்ளன.

சத்திரசிகிச்சை மருத்துவர், பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், புற்றுநோய், கண்நோய், சருமநோய் சார்ந்த மருத்துவர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கவுள்ளனர்.

(203)

# யாழ்.நூலகம் எரிந்ததைக் கண்டு அதிர்ச்சியில் உயிர்நீத்த தாவீது அடிகள்

**தென்னாசியாவின் அதிசிறந்த நூலகமாகத் திகழ்ந்த யாழ்.நூலகம் தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட அன்றைய அரசின் ஆதரவாளர்களாலும் குண்டர்களாலும் எரித்து சாம் பராக்கப்பட்ட 26ஆவது வருடாந்த தினம் இன்றாகும். நூலகக் கட்டடம் எரிந்து கொண்டிருந்ததை புனித பத்திரிசியார் கல்லூரியின் மேல் மாடிக்கட்டடத்தின் மேற்குப் பக்க அறையில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த பன்மொழிப் புலவரான தாவீது அடிகள் அதிர்ச்சியுற்று இன்னுயிரைத் துறந்ததும் இன்றைய தினமே அவரது நூற்றாண்டு நினைவும் இம்மாதமாகும்.**



தமிழ்மொழியின் தகைமை சால் சிறப்பைத் தமிழினம் கருதிடாக் காலத்தில் ''நும் மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இன் இனியே முழுவதும் உணர்மின்'' என வீரமுரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத்திரு கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீது அடிகளையே சாரும்.

யாழ்.நகரில் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரிய திலகமாகத் திகழ்ந்த ஆபிரகாம்பிள்ளை டேவிற்றினதும் அவரின் வாழ்க்கைத் துணைவியார் எலிசபேத் அம்மையினதும் அருந்தவப் புதல்வனாக தாவீது 1907.06.28 பருத்தித்துறையில் தும்பளையைச் சேர்ந்த மாவச்சை என்னும் சிறு கிராமத்தில் அவதரித்தார். (பிறந்த சில நாள்களில் அன்னையை இழந்தார்)

### மாணவ வாழ்வு

புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவனாகக் கற்ற இவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஞான வாழ்விலும் தலைசிறந்த மாணவ திலகமாக மிளிர்ந்தார். இலண்டன் மற்றிக்குலேசன் தேர்வு இரண்டிலும் முதலாம் வகுப்பிலே தேறி வரலாற்றுச் சாதனை படைத்தார்.

தாவீதடிகள் கொழும்புப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் படித்து இறுதித் தேர்வில் இலண்டன் இளங் கலை மாணித் தேர்வில் வரலாற்றுத் துறையில் அதி சிறப்புப்பெற்று, பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகளில் வெளிவாரி மாணவர்களில் அதிகூடிய புள்ளியைப் பெற்றதினாலும் பொருளியல், அரசியலுக்குரிய தங்கப் பதக்கத்தையும் பெற்று வரலாற்றில் தனிச் சிறப்படைந்தார். இவரால் ஈழத்தாய் பெருமையுற்றாள்.

### குருத்துவ உருவாக்கம்

கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியில் பூரண பயிற்சி பெற்று 1931.12.21இல் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். 1932இல் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் சிறிது காலம் திருப்பணி புரிந்தார். தாவீது அடிகள் ஆசிரியத் தொண்டிற்கே தன்னை அர்ப்பணித்தார். குருத்துவ வெள்ளிவிழா இவரின் ஊராகிய தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் பெரும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. குருத்துவப் பணியின் 50 வருட பூர்த்தி யாகும் ஆண்டின் நடுப்பகுதியில் இறைவனடி சேர்ந்தார்.

### ஆசிரியப் பணி

தாவீதடிகள் புனித பத்திரிசியார் கல்வி அன்னைக்குப் பணியாளனாகத் தம் வாழ்வைப் பூரணமாக அர்ப்பணித்த அருங்குணச் சான்றோன். இவர் முதல் 11 ஆண்டுகள் (1936-1947) உத்தம ஆசிரிய திலகமாகத் திகழ்ந்தார்.

### ஆய்வுப் பணி

கருவறை தொடக்கம் கல்லறை வரை கற்க என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தான் தொடங்கிய சொற் பிறப்பு ஒப்பியல் அகராதியின் வேலை முற்றுப் பெறமுன் 1947.01.22 இல் மறைந்து விட்டார். இவரின் சீடரே தாவீதடிகள்.

''விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா'' என்று பொங்கினான் பாரதி! ஆம் அந்தத் துர்ப்பாக்கிய நிலையில்தான் ஒப்பியல் அகராதி இருந்தது. தாவீதடிகள் ஆறு ஆண்டுகள் (1947-1952) அண்ணாமலை மைசூர், பம்பாய், இலண்டன், முன்ஸ்தர் என்ற பல்கலைக்கழகங்களில் பல்வேறு மொழிகளைக் கற்று தமிழ் மொழியை ஆராய்ந்தார். தாவீதடிகள் 33 மொழிகளில் வல்லுநராகவும், 100இற்கு மேற்பட்ட இதர மொழிகளில் பரிச்சயமுடையவராகவும் விளங்கினார்.

ஒப்பியல் அகராதியின் ஒன்பதாவது பகுதியைச் சிங்கள மொழியில் தாவீதடிகள் எழுத்திட்டமிட்டார். இதனால் தேசிய ஒருமைப்பாடு உருவாகுமென உணர்ந்து உழைத்த உத்தமராவார். சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதார பூர்வத்துடன் நிரூபித்துக் காட்டிய முதல் அறிஞர் தாவீதடிகள்.

''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே''

*பிரான்ஸிஸ் சென்.றோச் (துரை ஆரோக்கியதாசன்)*

என்ற திருமூலரின் கூற்றுக்கு இலக்கணமாகத் தன் சொந்த மண்ணிலும் மேற்குலக நாடுகளிலும் தமிழ்ப் பணியாற்றிய பெருமகன் தாவீதடிகள். தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழ் நடத்தலில் ஆலமரத்தின் ஆணிவேர் போலத் தமிழ்த் தூது தனிநாயகத்திற்கு வலதுகரமாகத் தாவீதடிகள் திகழ்ந்தார். தமிழின் பெருமையையும் மகிமையையும் உலக அறிஞர்கள் அறிந்து தலைவணங்கும் வண்ணம் தமிழ்ப் பண்பாடு (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டில் 12 கட்டுரைகளை தாவீதடிகள் எழுதியுள்ளார்.

### அடிகளைச் சுட்ட தீ

01-06-1981 இல் நடு இரவில் யாழ்.நூலகம் தீக்கிரையானது. அதிலுள்ள பெரும் விலைமதிப்புக்குரிய 97,000 நூல்களும் அரச நாசகாரிகளினால் நாசமாகின. யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மேல்மாடிக் கட்டடத்திலுள்ள மேற்குப் பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74 வயதுடைய தாவீதடிகள் இதனைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார். யாழ்.நூலகத்தை உருவாக்கினாலும் நடமாடிய பல்கலைக்கழகமாகிய தாவீதடிகளை யாரால் உருவாக்க முடியும்? தமிழ் கூறும் நல்லுலகம் தாவீதடிகளின் பணிகளை நன்றிப் பெருக்குடன் நினைவுகூரவேண்டும்.

*- நன்றி: S.P.C. 150 ஆவது ஆண்டுமலர்*

# இறை உணர்விற்கும், கலையுலகுக்கும் பெருமை சேர்க்கும் நடராஜர் திருவுருவம்

சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களுள் தலைமையும், பெருமையும் உடையது நடராச மூர்த்தம். உடலை இயக்கும் இதயத்துடிப்புப் போல உலக இயக்கத்திற்கும் நடராசப் பெருமானது தாண்டவம் துணைபுரிகிறது.

நடராசப் பெருமான் இத்திருநடனத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். ஆதலால், இந்நடனம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனப்படும். நடராசப் பெருமானின் திருவுருவம் உலக மக்களைக் கவர்ந்ததுபோல வேறெந்த உருவமும் கவர்ந்ததில்லை.

ஆடல்வல்லானின் 108 தாண்டவங்களையும், ஏனைய நிருத்தங்களையும் புராண, நாட்டிய, திருக்கோயில் வரலாறுகளிலும் விரிவாகக் காணமுடியும். சிவபெருமான் இந்த 108 நடன வகைகளையும் ஆடிக் காட்டியுள்ளார்.

ஞானக்கதிர்

அழகின் இருப்பிடமாகவும், அரிய பெரிய கருத்துக்களை விளக்கும் நிலையிலும், கவர்ச்சியின் தோற்றமாகவும், நிறைவான மகிழ்ச்சியின் உருவமாகவும், பண்பாட்டின் உச்சநிலையாகவும், நாகரிகத்தின் சான்றாகவும் விளங்கும் இத்திருவுரு இதன் துலக்கம் காலூன்றும் விதம்,கால் மாறி நடனம் ஆடும் நிலை, எடுப்பான போக்கு, ஒளி வீசும் ஞானக் கண்கள், சிறப்பான சிற்ப வடிவு, இசை, நாட்டியம் ஒருங்கமைந்த தன்மை, நவீன விஞ்ஞானம், மெய்ஞ்ஞானமும் சங்கமிக்கும் இடமாகத் தோற்றம் தருகிறது நடராசப் பெருவடிவம்.

முன்னொருக்கால் இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசிக்க தில்லையில் தேவர்கள், இந்திரன், பிரம்மா, விஷ்ணு, தில்லை மூவாயிரவர், பதஞ்சலி, உபமன்சு, வியாக்கிரபாதர் போன்ற முனிவர்களும் கூடியிருந்தனர். ஆனந்தத் தாண்டவத்தைக் காண அவாவுற்ற நிலையில், நந்தியம் பெருமான் கையில் பிரம்புடன் தோன்றினார்.

இறைவனின் ஆனந்தத் தாண்டவம் காணவந்தவர்களை அவரவர்க்கு ஏற்ற இடத்தில் அமரச் செய்தார். தேவதுந்துபிகள் முழங்கின. பதினைந்து நாழிகை ஆனதும் ஞான சபையிலே ஒளி வடிவமான வெளியில் கருணைவடிவமான உமாதேவியாருடன் எம்பெருமான் காட்சி தந்தார். அனைவரும் தலைமீது கரங்குவித்து 'சிவசிவ' என்றனர்.

புன்முறுவல் பூத்த திருமுகம், மூன்று கண்கள், கங்கை, பிறை கொன்றை மாலையுடைய சடையும், சங்ககுண்டலம் திருத்தோடு உடையசெவியும், திருநீலகண்டமும், தமருகம், அபயகரமும், அக்கினியுடனும், புலித்தோலாடையும், முயலகன் மேல் ஊன்றிய பாதமும், எம்பெருமானின் வலக்கை தமருகத்தை ஒலித்துக் கொண்டு சிவகாமி அம்மையார் காண ஆனந்த நடனம் ஆடினார் இறைவன் கால்களில் வேதம் என்னும் சிலம்பு ஒலித்தது.

இந்த ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்த கண்களுக்கு வேறு காட்சியும் வேண்டுமோ? ✦

# யா / யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்

## 20-03-2006 அன்று ஓய்வுபெற்ற உப அதிபர்

## திருமதி ஜெகசோதி நவரட்ணம் அவர்களின்

# சேவைநலன் பாராட்டு

### அர்ப்பணிப்பு மிக்க சேவையாளர்

20-03-2006 ஆம் திகதி ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி ஜெகசோதி நவரட்ணம் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இக் கல்லூரியில் ஆசிரியராக 1984 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட உப அதிபர் அவர்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும் கல்லூரியின் விருத்தியிலும் அயராது உழைத்த ஆசிரியப் பெருந்தகையாவார்.

உப அதிபராக பதவியேற்ற இந்த ஆசிரியை கல்லூரி முகாமைத்துவத்துடன் இணைந்து அர்ப்பணிப்புடனும், நேரிய நோக்கத்துடனும் செயலாற்றியதுடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும் விளங்கினார்.

கடமை உணர்விற்கு முதலிடம் வழங்கும் உப அதிபர் கல்லூரியின் உயர்விற்கு தோன்றாத் துணையாக நின்றார். அவரின் அன்பு கலந்த அர்ப்பணிப்பான கடமை எல்லோர் மனதிலும் இடம் பிடித்துள்ளது.

இளைப்பாறுக் காலத்தில் மகிழ்ச்சிகரமான நீண்ட நல்வாழ்வு வாழ்வதற்கு எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சி எனது வாழ்த்தினையும், ஆசியினையும் வழங்குகின்றேன்.

*ந.பரமசிவம்*
அதிபர், யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

### ஆளுமை மிக்க உப அதிபர்

திருமதி ஜெகசோதி நவரட்ணம் அவர்கள் எமது கல்லூரியில் கால்பதித்த நாள் முதல் கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரும் பணியாற்றியவர். கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் அரவணைக்கும் தாயாக நின்று கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளில் முன்னின்று உழைத்து நிறைவேற்றி வைக்கும் பண்புமிக்கவர்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றி கலந்துரையாடுவதற்கு பாடசாலை செல்லும் பெற்றோர்களுக்கு தக்க ஆலோசனை கூறி வழிப்படுத்தும் பெருந்தகை ஆவார். அன்னாரின் சேவை என்றும் நினைவு கூரத்தக்கது.

அவரின் ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய எல்லாம் வல்ல மணற்காட்டு முத்துமாரி அம்மனை இறைஞ்சி வாழ்த்துரை வழங்கிப் பெருமகிழ்வடை கின்றேன்.

செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### அன்னையாய் அரவணைத்தவர்

எமது கல்லூரியின் பாசமிகு அன்னையாய், ஆசிரியராய், பிரதி அதிபராய் 22 ஆண்டுகள் எமக்கு பணிசெய்ததமையை நினைந்து அவர்தம் பணிநிறைவினைப் பாராட்டும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். கல்லூரி அன்னை வைர விழாக் காணும் இவ்வாண்டில் தமது அகவை அறுபது முடிவில் ஓய்வுபெறுவதையிட்டு அவர்தம் பணிநிறைவினைப் பாராட்டுவதில் பரவசம் அடைகிறோம்.

எமது மதிப்பிற்குரிய பிரதி அதிபர் அவர்கள் தம் ஓய்வு காலத்தில் நல்லாரோக்கி யத்துடன் சகல வளங்களோடும் சந்தோசமாக வாழ தில்லைக்கூத்தனின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாணவர்கள்,*
யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.



## திருமதி ஜெகசோதி நவரட்ணம்

**உபஅதிபர்**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்**

*பிறந்த திகதி :- 21-03-1946*
*முதல் நியமனம் :- 20-06-1977*

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 20-06-1977 - 10-11-1978 | ஆசிரியர் - க/மாவிலை, குறாப் உலப்பனை. |
| 01-01-1978 - 12-12-1981 | ஆசிரியர் - க/கலாகா குறுப் கலாகா |
| 01-01-1982 - 31-12-1983 | ஆசிரியர் பயிற்சி கலாசாலை |
| 01-01-1984 - 31-05-2001 | ஆசிரியர் - யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். |
| 01-06-2001 - 20-03-2006 | உப அதிபர் - யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். |

### அருளாசிச் செய்தி

காரைநகரின் புகழ் பூத்த கல்லூரியாம் யாழ்ற்ரன் கல்லூரியில் 22 வருட காலம் ஆசிரியராக, பிரதி அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதில் (60) ஓய்வுபெறும் திருமதி ஜெகசோதி நவரட்ணம் அவர்கள் நேரம் தவறாது கருமமே கண்ணாகி கல்விப் பணியாற்றியமை யாவரும் அறிந்ததே. இவரின் ஓய்வு கல்லூரிக்குப் பாரிய வெற்றிடமெனினும் அவரின் சேவை என்றும் நினைவு கூரத்தக்கது. அவரின் கல்வி நிர்வாகப் பணிகள் சமூகத்தரால் மறுக்கற்பாலது.

ஓய்வுபெறும் இந்நாளில் அவர் எம் கல்வி, சமய கலாசாரத்திற்கு ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்கது. ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மணற்காடு முத்து மாரியம்மன் துணையோடு ஆசி வழங்கிப் பெருமகிழ்வடைகின்றேன்.

*ஞா.திருஞானசம்பந்தக் குருக்கள்*
மணற்காடு முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், காரைநகர்.

### கல்லூரியின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்

எமது கல்வி வலயத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் யா/யாழ்ற்ரன் கல்லூரியில் இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணியாற்றித் தமது கடமையைச் செவ்வனே செய்து பாடசாலையிலும், கிராம மக்களிடையேயும் நன்மதிப்பைப் பெற்றவர் திருமதி ஜெகசோதி நவரட்ணம் அவர்கள்.

யாழ்ற்ரன் கல்லூரியில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் தாம் கடமையாற்றிய காலங்களில் ஆசிரியப் பணியிலும், நிர்வாகப் பணியிலும் தமது திறமையை வெளிப்படுத்தி கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உறுதுணையாகச் செயற்பட்டவர். அவர் கல்லூரியிலிருந்து அறுபதாவது அகவையில் ஓய்வுபெறுவது தவிர்க்க முடியாததாயினும் அவர் தொடர்ந்தும் கல்லூரியின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை வழங்குவதோடு தமது ஓய்வுகாலத்தில் சகல வளங்களும் பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஆ.ராஜேந்திரன்,*
வலயக் கல்விப்பணிப்பாளர், தீவகம்.

### சீரிய வழிகாட்டியாக...

எமது கல்லூரியின் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அணிகலன்கள் பூண்டு நீண்ட காலமாக இன்முகத்துடனும் புன்முறுவலுடனும் சுறுசுறுப்புடனும் தனக்கே உரித்தான பாணியில் பாடசாலைக்காக நிறைந்த மனதுடன் சேவையாற்றியவர். ஓர் அன்னையாக அனைவரையும் அன்புடனும் அக்கறையுடனும் அரவணைத்துச் செல்லும் பண்பாளர். இக் கல்லூரிக் குடும்பத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றாலும் அவர் வழிகாட்டிச் சென்ற வாழ்க்கைப் பண்புகள் என்றுமே அவரை நினைவுகூர வைக்கும். இச் செம்மலின் ஓய்வுகாலத்தில் அவர் தமது குடும்பத்தினருடன் மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து வழிகாட்ட மணற்காடு அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

*ம.முகுந்தன்*
தலைவர், ஆசிரியர் கழகம்,
உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வரலாற்று மெய் நிலைகளை புறக்கணிக்கும் தென்னிலங்கை

*''இலங்கையில் 'இனப்பிரச்சினை' அல்லது 'தேசியப் பிரச்சினை' என்று எதுவுமே இல்லை.*

*'இனப்பிரச்சினை' ஒன்று உருவாவதற்கு மக்கள் இன ரீதியாக பிளவுபடுத்தப்பட்டு துருவப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் புலிகளின் பயங்கரவாதத்தால் மக்கள் பிளவுபடுத்தப்பட்டமை மட்டுமே இடம்பெற்றிருக்கின்றது.*

*சிங்கள நாகரிகத்தின் தாயகம் ஸ்ரீலங்கா. அதனால் சிங்களவர்க்குரிய - அவர்களுக்கு மட்டுமேயுரிய - ஒரே தேசம் அது. இங்கு தமிழர்கள் வெறும் சிறுபான்மையினர் மட்டுமே. இங்கு அவர்கள் தனித் தேசம், தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றுக்கு உரிமை கோரமுடியாது. சரித்திர ரீதியாகவும் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையிலும் அப்படிக் கோருவதற்கு அவர்களுக்கு உரிமையோ, அருகதையோ பாத்தியமோ ஏதுமில்லை.''*

- இப்படித் தெரிவித்திருக்கின்றது பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிபாரிசுகளைச் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு எழுத்து மூலம் தான் சமர்ப்பித்த ஆவணத்திலேயே அந்த அமைப்பு இப்படி மேலாண்மைவாதத் திமிரில் பிதற்றியிருக்கின்றது.

மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக்கொண்டிருக்கும் சிங்கள தேசத்தின் கருத்து நிலைப்பாட்டை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது ஜாதிக ஹெல உறுமயவின் இந்த ஆவணம். பேரினவாத மேலாண்மையின் அதிகாரத் திமிரில் புதைந்து கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களத்தினால் இலங்கைத் தீவின் உண்மையான வரலாற்றுப் புறநிலைகளை ஒப்புக் கொள்ளவோ, ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புகள், ஆதங்கங்கள் என்பவற்றைப் புரிந்துகொள்ளவோ முடியாது என்ற யதார்த்தத்தை ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு ஊன்றி வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைத் தீவு தொன்மை வாய்ந்த இரு நாகரிகங்களின் - தமிழர், சிங்களவர் ஆகிய இரு கலாசாரங்களின் - வரலாற்றுத் தாயகமாகும். வேறுபட்ட மொழிகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், வேறுபட்ட வாழிட நிலப்பரப்புகள், வெவ்வேறான வரலாறுகளைக் கொண்ட தனித்துவத் தேசிய இனங்களாக அவை இரண்டும் மிளிர்கின்றன. பண்டைய யுகம்வரை - கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை - தொடர்ந்து செல்லும் தொன்மை மிக்க ஆழமான வரலாற்று வேரோடல்களைக் கொண்டவை இந்த நாகரிகங்கள்.

ஆனால் பௌத்த மறுமலர்ச்சியின் வடிவமாகப் பிறப்பெடுத்த சிங்களத் தேசியவாதம், இத்தீவில் எண்ணிக்கை அளவில் பெரும்பான்மையினர் சிங்களவர்கள் என்ற பலத்தைப் பிரயோகித்து, இந்தச் சரித்திரபூர்வ உண்மைகளை தனக்கேற்றவாறு மாற்றி நிலைநிறுத்த முயல்கிறது. தனது இனத்தின் இருப்புக்கு முன்பிருந்தே இலங்கைத் தீவில் காலாதி காலமாக நிலைபெற்று, வியாபித்து வரும் தமிழினத்தின் இருப்பை, கேள்விக்குள்ளாக்கி, அந்த வரலாற்று உண்மையை மறுத்து - மறைத்து - புதிய கதை விடப் புறப்பட்டிருக்கும் சிங்களப் பேரினவாதம், மறுபுறத்தில் தனக்குக் கிடைத்த ஆட்சி அதிகாரத்தின் மூலம் தனது தமிழர் விரோதக் காழ்ப்புணர்வை திண்ணியமான சமூக, அரசியல், பொருளாதார ஒடுக்கு முறையாகவும் வெளிப்படுத்தி வருகின்றது.

சிங்களத் தேசியவாதம் ஆழமாகப் பொறித்துவிட முயன்றிருக்கும் இந்தப் புனைகதை முயற்சி தென்னிலங்கையையே ஒரு மேலாதிக்க மாயைக்குள் மூழ்கடித்திருக்கின்றது. இதையே கடந்த மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*''பண்டைய இதிகாசங்கள் புனைந்து விட்ட புரளிகளால் சிங்கள இனம் வழி தவறிச் சென்று தொடர்ந்தும் பேரினவாதச் சகதிக்குள் வீழ்ந்து கிடக்கின்றது. இதனால், சிங்கள - பௌத்த பேரினவாதம் இன்றொரு தேசியச் சித்தாந்தமாகச் சிங்களத் தேசத்தில் மேலாதிக்கம் செலுத்தி வருகின்றது. இந்தக் கருத்தாதிக்கம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் இருந்து பத்திரிகைத்துறைவரை ஊடுருவி நிற்கிறது. மாணவர்களோ, புத்திஜீவிகளோ, எழுத்தாளர்களோ, அரசியல்வாதிகளோ சுயமாகச் சிந்திக்க முடியாதவாறு சிங்களத்தின் மூளையத்தை இந்தக் கருத்தாதிக்கம் சிறைப்பிடித்து வைத்திருக்கின்றது. பௌத்த பேரினவாதக் கருத்துக்கள் சிங்களத்தின் மனவமைப்பில் ஆழ்ந்த அழியாத கோடுகளாகப் பொறித்து விடப்பட்டிருக்கின்றன.''*

- என்று கூறியிருந்தார் பிரபாகரன்.

மேற்படி சிங்களத்தின் மனதில் ஆழமாகப் பொறித்து விடப்பட்ட கோடுகளின் பிரதிபலிப்புத்தான் ஜாதிக ஹெல உறுமயவின் தற்போதைய யோசனைத் திட்டத்தின் அடிப்படையும் முன்மொழிவுமாகும்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் மூலாதாரக் கோட்பாடுகளையோ அல்லது அடிப்படை அம்சங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் - அல்லது புரிந்துகொள்ள விரும்பாமல் - வரலாற்று உண்மைகளையும், நியாயங்களையும் மூடி மறைத்து, தமிழர்களை இந்த இலங்கைத் தீவில் காலாதி கால வரலாற்று வேரோடல்களைக் கொண்டிராத வெறும் சிறுபான்மையினர் மட்டுமே என்றளவிற்கே அங்கீகாரமளிக்க தென்னிலங்கை தொடர்ந்தும் வறட்டுப்பிடிவாதம் காட்டுமானால் இந்தப் பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு சாத்தியப்படாமலேயே போய்விடும்.

மகாவம்ச மனவுலகில் - அந்தப் புராணக் கருத்துலகில் - பின்னிக் கிடக்கும் சிங்கள தேசம், இலங்கைத் தீவு, தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடை என்றும் சிங்கள இனத்திற்கே உரிய தனிச்சொத்துரிமை என்றும், மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையை விட்டு வெளியே வரப்போவதில்லை. சிங்களத்தின் மனவுலகில் ஆழமாக உறைந்து, அசைவற்று இறுகிப் போயிருக்கும் இந்தப் புராணக் கருத்தியற் குருட்டுத் தனத்திலிருந்து தென்னிலங்கைப் பெரும்பான்மையினர் மீண்டு, உண்மை ஒளிக்கு வரப்போவதில்லை.

இலங்கைத் தீவின் வரலாற்று உண்மைகளையும், சமூக மெய்மை நிலைகளையும் புரிந்துகொள்ளும் ஆற்றலும், அறிவுத்திறனும், ஆன்ம பக்குவமும், சமரசப் போக்கும் தென்னிலங்கைக்கு ஏற்படாதவரை பேரினவாதமே அங்கு தொடர்ந்தும் கனன்று பீறிட்டு கோலோச்சிக் கொண்டிருக்கும். அந்தக் கொடூரத்துக்கு மத்தியில் அமைதிவழித் தீர்வு சாத்தியமற்றதே.

# யாழ்.பொது நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்டமை ஈழத் தமிழர் வாழ்வியலில் என்றும் ஆறாத பெரும் வடு

**ஈழத் தமிழ் மக்களின் அரும் பெரும் சொத்தாக விளங்கிய யாழ். பொது நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்ட 26 ஆவது ஆண்டு இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**

1981ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி நள்ளிரவில், ஜூன் முதலாம்திகதி உலகத் தமிழர்களின் உயரிய சொத்தாகத் திகழ்ந்த யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு 26ஆண்டுகள் நிறைவடைகின்றன. எத்தனை யுகங்களானாலும் தமிழ் பேசும் மக்களது நெஞ்சங்களில் உறைந்திருக்கப் போகும் இவ்வடு சிங்களப் பேரினவாத அடக்குமுறைச் சிந்தனையின் செயல் வடிவமே.

தொன்று தொட்டு சிங்களப் பேரினவாதம் தமிழினத்தினைச் சிதைத்து சின்னா பின்னமாக்கி அழிப்பதையே தமது உயர் தார்ப்பரியமாக எண்ணி செயற்பட்டு வருகின்றது.

கல்வி என்பது தமிழ் இனத்தின் அடையாளம். ஓர் இனம் அழியாமல் நிலைத்து நிற்க, அவ்வினம் விருத்தியடைந்து முன்னேற கல்வியே பெரும் பங்கினை வகித்து நிற்கின்றது.

ஓர் இனத்தின் ஆணிவேராக இருக்கும் கல்வி அழிக்கப்படும் போது அவ்வினம் ஈடாடிப்போகும் என்பது திண்ணம். சிங்களப் பேரினவாதமும் இச் சிந்தனையை சிரசின் மேற்கொண்டு தமிழர்தம் கல்வியினை அழிக்க கங்கணம் கட்டி நிற்கின்றது. திடீர் திடீர் கல்விச் சீர்திருத்தங்கள், பாட நூல் திருத்தங்கள் அதற்கும் மேலாக ஆயுத ரீதியிலான ஒடுக்குமுறைகள் மூலம் தமிழர் கல்வியை பாதாளத்தில் தள்ளும் முயற்சியினை சிங்களப் பேரினவாதம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமே யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம்.

அன்று ஆட்சியில் இருந்த அமைச்சர் காமினி திஸநாயக்க தலைமையிலான சிங்களக் குண்டர்களே யாழ்.நூலகத் துக்கு தீ வைத்தனர். சம்பவத்தை அறிந்த அறிஞர்களும் கல்விமான்களும் துடித்தனர். மாணவர்களும் பெற்றோர்களும் கலங்கி நின்றனர். உலகத் தமிழினமே சிந்தை நொந்து துடித்தது.

அரியபல நூல்கள் கிடைத்தற்கரிய புத்தக பொக்கிஷங்கள் எல்லாம் தீயினில் பொசுக்கப்பட்டன. அறிஞர்களும் பண்டைய இலக்கியவாதிகளும் தங்கள் கைபட எழுதிய இலக்கிய சுவடிகள் அங்கு பேணி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாகத் தமிழி னத்தின் பூர்வீக இலக்கியங்களும், மரபுகளும் புத்தகங்களாக, சுவடிகளாகப் பேணப்பட்டு வந்த அருங்கலையகமாகவே இருந்தது யாழ்.நூலகம்.

எதிர்காலத்தில் தமிழினம் சிதைந்து விடும் என்ற சிந்தனையின் அடிப்படையில் தமிழ்க் கல்வித் தாயின் கருவறை



சிங்களத்தினால் சிதைக்கப்பட்டது. ஜனனிக்கப்போகும் தமிழ் குழந்தைகள் கூட இந்த துயரத்தினை சுமந்த வர்களாகவே வாழ்வார்கள். மாணவர்களின் அறிவுக் களஞ்சியம் தீயில் பொசுக்கப்பட்டதை இன்றைய மாணவர் சமூகம் எண்ணி எண்ணி மனம் கலங்குகின்றது.

அன்று சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் தொடங்கி தீயிடுதலாக வடிவம் பெற்று இன்று கல்விச் சமூகம் தெருப்பிணங்களாகக் கிடக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளி யிருக்கின்றது சிங்களதேசம். அதனால் ஒடுக்குமுறை சிந்தனையை ஒருபோதும் சிதைக்க முடியவில்லை.

**தமிழ் மாணவர் ஒன்றியம் (யாழ்.மாவட்டம்)**

யாழ்.நூலகம் மீண்டும் இப்போது திறக்கப் பட்டிருக்கின்றபோதும் அன்றிருந்த வளத்தினை - அதாவது அறிவுப் பொக்கிஷங்களை - பெற்றுவிட முடியாது. சிங்களப் பேரினவாதம் வைத்த தீ தமிழ் மக்களின் உள்ளத்தில் ஒரு ஆறாத பெரும் வடுவை - அழியாத அடையாளத்தை உருவாக்கி விட்டிருக்கிறது.

*

# புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வு 5 நாள்கள் ஐந்து பாடசாலைகளில்

## விசேட பஸ் சேவைகள் உண்டு

யாழ்.மாவட்டத்தில் புற்றுநோய்க்கான கதிர்வீச்சு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 8ஆம்திகதி வியாழக்கிழமை வரை ஐந்து பாடசாலைகளில் கண்காட்சியூடான புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வும் மருத்துவ ஆலோசனையும் நடத்தப்படவுள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு மற்றும் யாழ்.மருத்துவ பீடம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இவை நடத்தப்படவுள்ளன.

4ஆம்திகதி திங்கட்கிழமையன்று இந்து மகளிர் கல்லூரியிலும் 5ஆம் திகதி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் 6ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 7ஆம் திகதி அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் 8ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வுகள் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட நாள்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றுவதற்கு வசதியாக குறிப்பிட்ட தினங்களில் சம்பந்தப்பட்ட பாடசாலைகள் வழியாக போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அந்தந்த நாள்களில் சேவைகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வுகளில் பொதுமக்கள், மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இடம்பெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர். (அ-203)

# அதிபர் சேவை உள்ளீர்ப்பில் பதில் அதிபர்களுக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஜூன் 1

அதிபர் சேவை தரம் 2-II இற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில், தற்காலிக அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கேற்ப உப அதிபர், பிரதி அதிபர் மற்றும் பகுதித் தலைவர்களாகவும் நியமனங்கள் வழங்கப்படலாம் என்று அறியப்படுகின்றது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 540 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். எழுத்துப் பரீட்சையில் தோற்றியவர்கள் அனைவரும் இப் பரீட்சைக்கு அழைக்கப்பட வில்லை. புள்ளிகளின் அடிப்படையிலேயே அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-202-68)

# மங்கள, சிறிபதி இருவரிடமும் விளக்கம் கோர சு. க. முடிவு

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் கூடிய ஸ்ரீல. சு. கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்சியின் ஒழுங்கு விதிகளை மீறினார் என்று குற்றஞ்சாட்டி சிறிபதி சூரியாராய்ச்சி எம். பியிடம் கடிதமூலம் விளக்கம் கோரப்பட்டிருந்தது. இவரை ஸ்ரீ ல. சு. கட்சி ஒழுக்காற்றுக் குழுவுக்கு அழைத்து விளக்கம் கோரவும் மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை- இப்போது லண்டனில் தங்கி இருக்கும் மங்கள சமரவீர எம். பி. நாடு திரும்பியதும் அவருக்கு விளக்கம் கோரும் கடிதத்தை வழங்கவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மங்கள சமரவீரவுக்கு வழங்கப்படவிருந்த விளக்கம் கோரும் கடிதம் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, போக்குவரத்து அமைச்சர் டலஸ் அளகப்பெரும ஆகியோரின் தலையீடு காரணமாக முன்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (சி)

# அத்தியாவசிய சேவைகள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 1

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. அரச அதிபர் இதனை அறிவித்துள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு முற்பகல் 10 மணிக்கு இக்கூட்டம் நடைபெறமாட்டாது என்றும்-

விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் என்றும்- அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய நிகழ்வுகள்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிறுவப்பட்ட நீர்த்தாங்கி திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யுனிசெவ் திட்ட உத்தியோகத்தர் பிறட்றிக் அஸ் புளுண்ட், யாழ்.கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு.சிவபாலன், யுனிசெவ் உதவித் திட்ட உத்தியோகத்தர் யோ.தயாபரன், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொள்வர். (29-203)

* * *

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தில் சமுதாய அடிப்படையில் தொழில் திறன் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு இன்று முற்பகல் 10 மணிக்கு மூளாய் பயிற்சி மண்டபத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

நிறுவனத் தலைவர் தா.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க. கணேஷ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (1-203)

# 7 மைல் சென்று 1குடம் தண்ணீர் பெறும் கஷ்டம்!

நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு கிழக்குப் பிரதேசங்களில் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பிரதேச மக்கள் ஒரு குடம் குடி தண்ணீரைப் பெறுவதற்காக ஏழு மைல்கள் தூரத்திற்கு செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் சாராப்பிட்டி குழாய் நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்தத் தண்ணீர் உவர்த் தன்மையுடையதாக மாறி வருகின்றது. இதனை அடுத்தே குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச மக்கள் அதிகாலையில் 7 மைல்கள் மேற்கு கோட்டைக்காடு பிரதேசத்திற்குச் செல்கின்றனர். அப்பிரதேசத்திலும் இரு கிணறுகளே குடி தண்ணீருக்கு உகந்ததாக உள்ளன. அதனால் ஒருவர் ஒரு குடம் தண்ணீரை மட்டுமே எடுத்து வரக் கூடியதாக உள்ளது. (அ-202-111)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 19 | சனிக்கிழமை 02.06.2007 |
| திதி : துதியை | மு.ப. : 08.24 |
| நட்சத்திரம் : மூலம் | மு.ப.: 10.35 |
| சுபநேரம் | : 08.52 - 10.22 |
| ராகுகாலம் | : 04.22 - 05.52 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கான யுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்துக்கான சாவி இந்தியாவிடம் உள் ளது எனவும் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்தார். தமிழ்ப் புலிகள் குறித்து நாங்கள் இருவரும் அதிகம் உரையாடினோம்.

''பயங்கரவாதிகள் பலவீனமடையும்வரை அவர்கள்பேச்சுக்கு வரமாட்டார்கள்'' - என்றார் அவர்.

ஆனால் இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் நோக்கம் இராணுவத் தீர்வு ஒன்றை எட்டுவது என்ற நிலைப்பாட்டை அவர் அடியோடு நிராகரித்தார்.

ஆனால் அதற்கு மாறாக, அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் இரணுவ நடவடிக்கைகள், அரசியல் இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான விடயத்தில் அற்ப பகுதிதான் என்றார் அவர்.

அப்படியானால் இது ஆக அரசியல் தந்திரம் தானா? இருக்கலாம்.

அவரது இந்த உத்தியை ''இராணுவ வெற்றியைப் பொறுத்து உடனடிப் பேச்சுக்குத் தயார்'' என்ற நிலைப்பாடாக நாம் விவரிக்கலாமா?

உணர்வுபூர்வமாக அப்படி இல்லை என்று மறுத்தார் அவர். ஓர் அரசியல் தீர்வுதான் அவரது பிரதான இலக்கு. ஆனால் அதே நேரம் பிரபாகரன் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத் தப்பட வேண்டும். ஆயுதங்களை அவர்கள் ஒப்படைக்காவிட்டாலும், புலிகள் முதலில் யுத்தம் புரிவதை நிறுத்த வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு.

**பிரபாகரன் தயார் என்றால் நானும் தயார்**

''பிரபாகரன் தயார் என்றால் நானும் தயார்'' - என்றார் அவர். ''இதை நாம் தெளிவாகக் கூறிவிட்டோம். ஆனால் புலிகளின் பயங்கரவாதத்துக்கு மண்டியிட நான் தயாரில்லை. அதை நான் பல தடவை கள் கூறியுள்ளேன்.

''நான் தாக்கப்பட்டால், நான் பதில் தாக்குதல் நடத்துவேன். அதைத் தான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் செய்துவருகின்றோம்.'' - என்றார் ஜனாதிபதி.

புலிகள் தங்கள் நடவடிக்கைகளைக் கொழும்புக்கும் காலிக்கும் கொண்டுவந்து விட்டனர். சரித்திரத்தில் முதல் தடவையாகப் புலிகள் தங்களின் வான் பலத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர்.

இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி அரசியல் தீர்வு காண்பது என்பது சந்தேகத்துக்கு இடமான யதார்த்த நிலையா?

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு சந்தேகம் ஏதும் இல்லை. ஆம், விரைவில். அதிகமானோர் இதனை உணர்வர் என்கிறார் அவர்.

''நான் இதனை மிகவும் தெளிவாகக் கூற வேண்டும். நாங்கள் கிழக்கை பயங்கரவாதத்திலிருந்து விடுவித்திருக்கிறோம். பேச்சுக்குச் செல்வதைத் தவிர வேறு வழி இல்லை என் பதைப் பிரபாகரன் உணர்வதற்கு நீண்ட காலம் பிடிக்காது. நாம் அவரைப் பலவீனப்படுத்தி யுள்ளோம். அவர் பலவீனப்பட்டிருக்கும் போதுதான் சமாதானத் பற்றிப் பேசுவார். அவர் பலமடையும் போது அவருக்கு யுத்தமே தேவைப்படும்.'' - என்கிறார் ஜனாதிபதி.

**மனித உரிமை மீறல்களை மறுத்தார்**

ஏழுநூறுக்கு மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுவது உட்பட - குறிப்பாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து - நான் கேள்வி எழுப்பியபோது அதனை அவர் அடியோடு மறுக்கிறார்.

பதிலாக சுற்றிவளைத்து நீண்ட விளக்க மளித்த அவர், அதற்கான குற்றப் பொறுப்பை புலிகள், பிரிந்து சென்ற கருணா குழு, சர்வ தேச சக்திகள், ஏன் கடத்தப்பட்டோர் மீதும் என - பெரும்பாலும் எல்லாத் தரப்புகள் மீதும் - அவர் சுமத்தினார்.

''கடத்தப்பட்டோர் எனக் கூறப்படுவோரில் பெரும்பாலானோர் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். கடத்தப்பட்ட சமயம் முறைப்பாடு செய் வோர், மீண்ட பின்னர் அது பற்றித் தகவல் வெளியிடுவதில்லை.'' - என்றார் அவர். - இப்படி அந்தச் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

# புறக்கோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''சந்தேகத்திற்கிடமான முறையில் யாராவது தங்கினால் அவர்களைப் பற் றிய தகவல்களைத் தாருங்கள் என்றும் -

அவ்வாறானவர்களைத் தங்க இட மளிக்காதீர்கள் என்றும்தான் கேட்டோம். ''நான் சொன்னதை லொட்ஜ் உரிமையாளர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வில்லை - என்றார்.

பொலிஸ் அதிகாரியால் விடுக்கப்பட்ட தாகக் கூறப்படும் உத்தரவு குறித்தும் அதனால் தோன்றிய பதற்றம் குறித்தும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங் காவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இது விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

ஐ.தே.க. நேற்றிரவு விடுத்த அவசர செய் திக் குறிப்பில் பொலிஸாரின் உத்தரவைக் கண்டித்து -

அப்பாவித் தமிழ் மக்களை இன் னலுக் குள் ஆக்குவது கண்டனத்துக்குரியது. இதன் மூலம் தீவிரவாதத்தை வளர்ப்பதாகவே முடியும்; கட்டுப்படுத்த முடியாது என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# பங்குத்தந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வச்சோதனைச் சாவடியில் அரச படையினரால் வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் காணாமற்போனார்கள். இவர்கள்காணாமற்போனமை தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு இலங்கை இராணுவத்தை வற்புறுத்தி யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மதகுருமாரும், பொதுமக்களும் பல்வேறு ஆட்சேபப் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக பரிசுத்த பாப்பரசரின் விசேட பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக விஜயம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி சடலம் கடலின் ஆழத்தில் புதைந்து கிடக்கவேண்டும் என்பதற்காகக் கொலையாளிகள் எடுத்த தீவிர நடவடிக்கைகளை நோக்கும் போது இந்த உடல்பாகம் மிக முக்கிய நபர் ஒருவருடையதாக இருக்க லாம் என்று ஆரம்பத்திலேயே சந்தேகம் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. 2006 ஓகஸ்ட் 20 ஆம் திகதி காணாமற் போனவண. ஜிம் பிறவுணின் உடல் பாகம், சுமார் ஏழு மாதங்கள் கழித்து 2007 மார்ச் 14 ஆம் திகதி வேலணை [illegible] திலுக்கடலில் மீட்கப்பட்டது என்பதும் தெரிந்ததே. (சி)

2009 A/L கலையில்

[illegible]

★ ஆரம்பம் 02.06.2007 பி.ப. 4

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

★ தனிப்பாட அனுமதி உண்டு.

பெலின்கலா அக்கடமி புங்கன்குளம்.

# பாகிஸ்தானிடமும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னோம். தமிழக கடலோரப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள், அதை தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினோம். தமிழக கடலோரப் பகுதியில் தூத்துக்குடி போன்ற மாவட்டங் களில் பாதுகாப்பை பலப்படுத்துவதன் அவ சியத்தை வலியுறுத்தினேன். தமிழக மீனவர்களுக்கு எந்தளவு பாதுகாப்பு அளிக்க முடியுமோ அந்தளவு பாதுகாப்பு வழங்கு வது உறுதி செய்யப்படும்.

★ ஒரே தலைமையின் கீழ் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து ஆலோசனைகள் வந்துள்ளன. இவ்விடயத்தில் கவனம் செலுத்து வோம். இலங்கை கடற்படையுடன் சேர்ந்து கூட்டு ரோந்து மேற்கொள்ளப்படமாட்டாது.

★ டில்லியில் சிலர் கூட்டு ரோந்துப் பணி குறித்து கேள்விகளை எழுப்பினர். 'கூட்டு ரோந்து சரியல்ல; ஒருங்கிணைந்த பாது காப்பு கொடுக்கலாம்' என்று கூறினேன். ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் செயல் படுவதில் பிரச்னைகள் ஏற்படுமா என்பது பற்றி கடற்படை அதிகாரிகளுடன் ஆலோ சிக்க உள்ளேன்.

★ மீனவர்களுக்கு எங்கு மீன்கள் கிடைக்கிறதோ, அங்கு தங்களது வாழ்வாதாரத்தை நோக்கிச் செல்கின்றனர். சர்வதேச எல்லையை கடக்க விடாமல் அவர்களை தடுப் பது சரியல்ல.

★ 'மரியா' கப்பல் விவகாரம் தானே. விடு தலைப் புலிகள் அமைப்பின் கடல் புலிகளால் தாக்கப்பட்டு தான் தமிழக மீனவர்கள் உயிரிழந்தனர். இலங்கை கடற்படையினர் சுடவில்லை. மேலும், மீனவர்களை சுடமாட்டோம் என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

★ எந்த பயங்கரவாத இயக்கமும் விமானப் படை வைத்திருப்பதை ஆதரிக்க முடியாது. வான்வெளி தாக்குதல் அதிகரிப்பதை நாம் எப்போதும் விரும்ப மாட்டோம்.

★ இந்த பிராந்தியத்தில் பல மிக்க நாடு இந் தியா தான். சீனா, பாகிஸ் தான் நாடுகளின் உதவிகளை இலங்கை அரசு கோரக் கூடாது. அவர்களுக்கு என்ன தேவையோ இந்தியாவிடம் தான் கேட்க வேண்டும்.

இலங்கைக்கு எந்தவிதமான உதவி தேவை என்பதை அறிந்து செயற்படுவோம்.

தாக்குதலுக்கான ஆயுதங்களை இலங்கைக்கு இந்தியா வழங்காது. இலங்கைக்கு ரடார்கள் வழங்குவதை இங்குள்ள அரசியல் தலைவர்கள் சிலர் எதிர்க்கின்றனரே? ரடார்கள் பாதுகாப்புக்கான கருவி தான். தாக்குதல் நடத்த பயன்படுவதில்லை. எனவே தான் அவற்றை இலங்கை அரசுக்கு வழங்குகிறோம்.

- இவ்வாறு நாராயணன் கூறினார். (அ)

# இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பிரிட்டனுக்குரிய கோர்டன் பிறவுண்'' என்ற விசேட நிகழ்ச்சியின் போதே தமிழர் ஒன்றியப் பிரதிநிதிகள் புதிய பிரதமரைச் சந்தித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கெய்த் வாஸ் தலைமையில் அண்மையில் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, இலங்கை விவகாரம் தொடர்பாக சில புதிய வழிமுறைகளை வகுத்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், நோர்வே அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வது அவற்றில் முக்கியமானதாகும்.

இலங்கையில், மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான இந்த யோசனையை உங்கள் தலைமையிலான அரசாங்கம் எந்தளவு அக்கறையுடன் செயற்படுத்தும்?-

இன்னும் எத்தனை ஈழத் தமிழர்கள் செத்து மடிவதற்கு முன்னர், எத்தனை ஆயிரம் தமிழர்கள் இடம்பெயர்ந்து ஏதிலிகளாகுவதற்கு முன்னர், இலங்கை மீது பிரிட்டன் பொருளாதாரத் தடையை விதிக்கப்போகிறது? - என்று தமிழர் பிரதிநிதிகளில் ஒருவர் கோர்டன் பிறவுணிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த போது புதிய பிரதமர் கூறியதாவது:-

இது ஒரு முக்கியமான கேள்வி. இலங்கை யின் சமகால நிலை குறித்து இக்கேள்வி எழுப்பப்பட்டது மிகவும் பொருத்தமான தாகும்.

எனது நாடாளுமன்ற வாழ்க்கையில், எனக்குத் தெரிந்த வகையில் இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்வதற்கு பிரிட்டிஷ் அரசு நேரம் ஒதுக்கியது இதுவே முதல் தடவை யாகும். (மே மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற மூன்றரை மணிநேர விவாதம் குறித்தே கோர்டன் பிரஸ்தாபித்தார் என்று உணர்க்கப்படுகிறது). புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது, முன்னாள் வெளிவிவகார அமைச் சர் ஜாக்ஸ்ரோ, சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹிலாறி பென், வட அயர்லாந்து விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெயின் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

புதிய பிரிட்டிஷ் பிரத மரும், அவரது மூத்த அமைச்சர்களும் இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து, மிகக் குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் இலங்கை அரசு நடத்திவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் அறிந்து வைத்திருப்பதனை மேற்படி சந்திப்பின்போது அறியக்கூடியதாக இருந்ததாக தமிழர் ஒன்றியப் பிரதி நிதிகள் தெரிவித்த னர். (அ)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா நவரத்தினம்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் கரப்பந்தாட்ட வீரர், ஈழநாடு, தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் செய்தியாளர், வலி. மேற்குப் பயிர்ச் செய்கைக் குழுச் செயலாளர், சங்கானை ப. நோ. கூ. சங்க 30ஆம் இலக்கக் கிளைத் தலைவர்)



கொக்குவில், நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நவரத்தினம் நேற்றுக் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் அன்பரசி, தயாளன் (லண்டன்), சகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன்னையா - அன்னமுத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற சுபத்திரை, துரைகுட்டி, துரைச்சாமி, துரையப்பா, அழகம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராஜலிங்கம் (மலேயன் பென்சனியர்), முருகுப்பிள்ளை (தபாலதிபர்), கந்தையா ஆகியோரின் மைத்துனரும் பவளச்சந்திரன் (கட்டட ஒப்பந்தகாரர்), வசந்தாதேவி (லண்டன்), நடராசா (இளைப்பாறிய கணக்காளர்), இராசதுரை, இந்திராணி சண்முகரட்ணம் (கணக்காளர்), புவனராணி, இராஜேந்திரன், குபரேந்திரன், சர்வேந்திரன், கலா ஆகியோரின் மாமனும் மதுஷா, ஷகீரன், பபிசன், லந்துஷா, வினோத், தனுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது விருப்பத்திற்கு ஏற்ப யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திடம் ஒப்படைக்கப்படும். அதற்கு முன்னதாக அவரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*சங்கானை.*

**தகவல்:**
(61163) **ச. பவளச்சந்திரன் (மருமகன்).**

### திருமதி தம்பித்துரை சரஸ்வதி



ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை சரஸ்வதி நேற்று (31.05.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - அன்னம்மாவின் அன்பு மகளும் செல்லப்பா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லப்பா தம்பித்துரையின் அன்பு மனைவியும் கணேசப்பிள்ளை, பத்மநாதன் (கனடா), தவமணி, இராஜேஸ்வரி, சண்முகலிங்கம் (கனடா), நந்தகுமார் (கனடா), கோபாலகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரவதனா, மகாலஷ்சுமி (கமலா - கனடா), காலஞ்சென்ற செல்வராசா, பரமேஸ்வரன், ராணி (கனடா), கலா (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சதீஸ்குமார் (சுவிஸ்), சுகுமார் (கனடா), கலைமதி, சுரேஸ்குமார், சபேஸ்குமார் (லண்டன்), வத்சலா (ஜேர்மனி), தேவபாலன் (கனடா), தருமினி (கனடா), மகிந்தன், கலைச்செல்வி, தவச்செல்வி (பிரான்ஸ்), தவஜனார்த்தன், தர்சினி, நிமலராஜன் (கனடா), மயூரன் (ஜேர்மனி), விசா (கனடா), றுபேஸ் (கனடா), ஜெபீனா (ஜேர்மனி), துஜாலா (ஜேர்மனி), பிரவீன் (ஜேர்மனி), கிஜோர் (கனடா), அயத் (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும் இராசையா, கந்தையா, தம்பித்துரை, அப்பையா, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
*தொ.பே. 4590121* (61164)

**தகவல்:**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் பாஸ்கரன்

அரசடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாஸ்கரன் நேற்று (31.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் - ஜெயமலர் தம்பதியரின் மூத்த புதல்வனும் மல்லிகாறஞ்சினியின் அன்புக் கணவரும் உமையாள், றுக்கேஸ், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளினாசனி ராஜதுரை (பாடசாலை, பல் சிகிச்சையாளர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற கமலாசனி மற்றும் யமுனா பகீதரன் ஆகியோரின் சகோதரனும் இராசதுரை, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி,*
*ஆனைக்கோட்டை.*

**தகவல்:**
**த. இராசதுரை (மைத்துனர்).**

### திருமதி இராசரத்தினம் பரிமளம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் மீண்டும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பரிமளம் நேற்று (31.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி சேதுப்பிள்ளையின் மகளும் சுசிலாதேவி, சாந்தீஸ்வரன், நிர்மலாதேவி, ஜெகதீஸ்வரன், மிதிலாதேவி, லதாதேவி, லலிதாதேவி, நித்திலா, வினோதன், சேந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் சிவசுப்பிரமணியம், சிவாஜினி, சிவசாரா, கனகேஸ்வரி, யசோதகுமார், செல்வகுமார், இரத்தினசோதி, இரவீந்திரன், சிவநிதி ஆகியோரின் மாமியும் மயூரன், கஜானன், சிந்துரா, தனுஷன், சர்ஷிகா, துவியன், சோபிகா, கோபிநாத், ஹரிசனாத், குருஷாந், துசாரா, கபீரா, துஷாந், நிதுசன், தாமிரா, கரிஷியன், கரிராம், ஷியாம், சுஜானா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2007) வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குறும்பன்,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

**தகவல்:**
**இ. ஜெகதீஸ்வரன் (தீசன் - மகன்).**


MCS BIT UCSC

University of Colombo School of Computing
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப்பாடசாலையினால் 16-05-2007 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழ்ந்த வருடாந்த பட்டமளிப்பு விழாவில் எமது நிறுவனம் (MCS) BIT கற்கையை நடாத்தும் சிறந்த நிறுவனமாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. BIT கற்கையை அர்ப்பணிப்புடன் போதித்த விரிவுரையாளர்கள், சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய மாணவர்கள் அனைவர்க்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

-MCS நிறுவனத்தினர்

MCS, 324, Palaly Road Jaffna

Supported by UNDP/JRRP



**தவறிவிட்டது**

Nokia 2300 கையடக்க தொலைபேசி கந்தர்மடம் புகையிரத வீதிக்கும் அம்மன் ஆலயத்திற்குஇடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 15, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் கொடுத்தால் சன்மானம் வழங்கப்படும்.



**விக்னா கல்வி நிறுவனம்**

தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ். | கிளை நிறுவனம் 417, கே.கே.எஸ். வீதி யாழ். இந்து கல்லூரி அருகில்

இரு இடங்களிலும்

O/L DAY CLASS (8.30 - 2.30)

பிரிவு 4 ஆரம்பம் (04.06.07) 8.30 a.m

பிரிவு 2 தரம் 6, 7, 8, 9, 10,

O/L EVENING CLASS (3 - 5)

கணித பாடத்தில் சித்திபெறாத A/L மாணவர்கட்கான விசேட பிரிவு ஆரம்பம் 02 - 06 - 07 (ஒரு மணி)

[illegible]


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] இல 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org